# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 214 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 06ஆம் திகதி புதன்கிழமை (19.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 27, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50



'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


## மே முதல் அரை சொகுசு பஸ் கிடையாது



**கே. சுபானி**

அரை சொகுசு பஸ் சேவைகளை இம்மாத இறுதிக்குள் நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதுகுறித்து தேசிய போக்குவரத்து சபையின் தலைவர் நிலான் மிரண்டா தெரிவிக்கையில்,

அரை சொகுசு பஸ் சேவைகள்... 02 பக்கம்



## கூட்டு அரசியல் சூழ்ச்சியில் ரணில்

### ஏமாற வேண்டாம் என எச்சரிக்கிறார் சஜித்

02 பக்கம்



## தீவிரவாத அரசியலை உருவாக்கும் முயற்சி

### புலனாய்வு அறிக்கையை சுட்டிக்காட்டி அமைச்சர் சுசில் தகவல்

**கே. சுபானி**

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீளாய்வுப் பணிகளை தாமதப்படுத்துவதன்... 02 பக்கம்

## போர் விமானத்துக்கு நிதி ஒதுக்கீடா?

### அமைச்சரவையை மீறி தீர்மானம் எடுக்கப்படாது என்கிறார் பந்துல



**நா. தினுஷா**

தேசிய பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்கள் தேசிய பாதுகாப்புச் சபை மற்றும்... 02 பக்கம்



## இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் புற்றுநோய் ஆபத்து

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு நடத்திய பரிசோதனையில் வெற்றிலையோடு பயன்படுத்தப்படும் இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் ரோடமைன் பி என்ற புற்றுநோயை உண்டாக்கும் சேர்மம் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளிலிருந்து பெறப்பட்ட நாற்பத்தெட்டு வெற்றிலை பொதி மாதிரிகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் இந்த புற்றுநோய் உண்டாக்கும் இரசாயனம் அதிகம் உள்ளதாக தெரியவந்துள்ளது.

02 பக்கம்

# கோல்பேஸில் அரசியலுக்குத் தடை!



### அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தைக் கட்டுப்படுத்த வியூகம்

**நமது விசேட செய்தியாளர்**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறப்பதற்குக் காரணமாக அமைந்த மக்கள் போராட்டம் இடம்பெற்ற பிரதான பகுதியான ஜனாதிபதி செயலக வளாகத்தை உள்ளடக்கிய காலிமுகத்திடலில் அரசியல் கூட்டங்கள் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02 பக்கம்

## அத்தியாவசிய சேவைகள் பிரகடனம்

மின்சார விநியோகம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், தபால், சுகாதாரத்துறை ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்கவால் இந்த வர்த்தமானி வெளியிடப் பட்டுள்ளது.

அதற்கிணங்க மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், தபால் சேவை, வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை வழங்கல் தொடர்பில் வழங்கப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் சகல வசதிகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் பொதுவாழ்க்கையை பேணுவதற்கு உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் இன்றியமையாதவை என்பதால் அந்த சேவைகளில் தடையோ அல்லது இடையூறுகளோ ஏற்படக்கூடும் என்பதை கருத்திற்கொண்டே அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## கமெண்ட் கந்தர்...

**பொதுஜன பெரமுனவுக்கோ, யூ.என்.பிக்கோ பெரியளவு கூட்டம் வராது...அதேபோல வேற ஆக்கள் மே தினக் கூட்டத்தை கோல்பேஸில நடத்தினா அதுவும் மானக்கேடு.. இதெல்லாம் நினைச்சுத்தான் கோல்பேஸில அரசியல் கூட்டம் நடத்தத் தடை விதிச்சிருக்கிறார் போல ரணில் மாத்தயா..!**



## ஊடகங்களுக்கு எதிராகவும் சட்ட ரீதியான நடவடிக்கை

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜயதாச சுட்டிக்காட்டு



**நா. தினுஷா**

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம், பயங்கரவாதத்துக்கு ஒத்துழைக்கும் வகையில் அல்லது பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய செய்திகளை ஊடகங்கள் வெளியிடுமாக இருந்தால் அதுதொடர்பில் சட்ட நடவடிக்கை... 02 பக்கம்

## உஷ்



**பிரிட்டனில் சார்ள்ஸ் மன்னருக்கு முடிசூடும் விழாவில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் அடுத்த மாத முற்பகுதியில் அங்கு செல்லவுள்ளார்.**

**ரணிலுடன் செல்ல அரச பிரமுகர்கள் பலர் முயற்சிகளை எடுத்தாலும், செலவைக் காரணங்காட்டி அவர்களை நிறுத்திவிட்டாராம் ரணில்.**

**புதிய அமைச்சரவையை நியமித்துவிட்டே ரணில் இங்கிலாந்து செல்லவுள்ளதாக தகவல்.**

## எரிபொருள் ஒதுக்கீடு ஒரு வாரத்துக்கு நீடிப்பு



தேசிய எரிபொருள் அனுமதி முறையின் கீழ் அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் ஒதுக்கீடானது குறைந்தது இன்னும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்படும் - என மின்சக்தி, எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்ட நாட்களில் நுகர்வு உள்ளிட்ட புள்ளி விபரங்களை ஆராய்ந்து அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு தொடர்ச்சியாக வழங்கப்படுமா, இல்லையா என்பதை...

02 பக்கம்

## அன்னை பூபதிக்கு யாழில் நினைவேந்தல்



**யாழ். செய்தியாளர்**

தமிழர்களுக்காக அஹிம்சை வழியில் போராடி தன்னுயிரை ஈகம் செய்த தியாகத்தாய் அன்னை பூபதியின் இறுதிநாள் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் நல்லூரடியிலுள்ள .... 02 பக்கம்

## பொலிஸ், சமுர்த்திக்கு கோபா அழைப்பு

**கே. சுபானி**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றை அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா குழு) முன்னிலையில் அழைத்திருப்பதாக அக்குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். இதற்கமைய எதிர்வரும்.. 02 பக்கம்

## இராஜதந்திர ரீதியில் பேச்சு இடம்பெறவில்லை



### சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதிசெய்வது தொடர்பில் அரசு அறிவிப்பு

**நா. தினுஷா**

குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதிசெய்வது தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையில் எந்தவொரு பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை.

02 பக்கம்

## மின்சார சபை மறுசீரமைப்பு பாராளுமன்ற ஒப்புதலுக்கு

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



**கே. சுபானி**

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு செயல்முறையில் முன்மொழியப்பட்ட வரைபுக்கும் கால அட்டவணைக்கும்... 02 பக்கம்

## தொழிற்சங்க நடவடிக்கையால் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பு

### அரசாங்கம் சுட்டிக்காட்டு

**நா. தினுஷா**

நாட்டினதும் அரசாங்கத்தினதும் நிலைமை அறிந்தும் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பது அநீதியான செயற்பாடாகும். இதனால் மாணவர்களுக்கே பாதிப்பு ஏற்படுகின்றது. இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடாதென்றால்... 02 பக்கம்

## அமைச்சரவைத் தீர்மானங்கள்

05 பக்கம்

## மின்சார சபை...

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் பாராளுமன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

மே மாத இறுதிக்குள் புதிய மின்சார சட்டத்தின் இறுதி வரைவு பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.

மேலும், மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒருங்கிணைப்பு பணியகத்தை நிறுவுவதற்கும், செயல்முறை மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, USAID மற்றும் JICA போன்ற மேம்பாட்டு நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதற்கும், நிதி மற்றும் மனிதவள தணிக்கைகளை முடிக்கவும் மற்றும் மறுசீரமைப்பு செயன்முறையையும் எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் முடிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ஊடகங்களுக்கு...

எடுக்க முடியும் என்பதுடன் குறித்த செய்தியின் பின்னணியில் பயங்கரவாத செயற்பாடுகள் இருக்கின்றதை அறியாமல் பிரசாரம் செய்திருந்ததால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்களை இந்த சட்டத்துக்கு உட்படுத்த முடியாது என்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (18) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஒரு சட்டமூலமாக இருந்த வருகிறது. 1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாகவே பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பயங்கரவாத செயற்பாடுகள் ஆரம்பமட்டத்தில் இருந்ததாலேயே அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தியதாலேயே, பயங்கரவாதத்தை வெற்றிக்கொள்ள முடிந்தது. ஆனால், யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டம் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதாக சமூகத்தில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இடம்பெற்றவொன்றாகும். சில சந்தர்ப்பங்களில் சரியான காரணங்களின் அடிப்படையில் அவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது என்பதையும் அவதானித்திருக்கிறோம்.

இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று சகலரும் கோரியிருந்தார்கள். குறிப்பாக எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் இந்தச் சட்டத்தை மாற்றவேண்டுமென்று கோரினாலும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் அதனை செய்வதில்லை. அதனடிப்படையிலேயே நல்லிணக்கத்துக்காக ஏற்ற மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தோம். இந்தச் சட்டத்தினால் பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடியை சந்தித்தது மாத்திரமல்லாமல் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்த இராணுவ தலைவர்கள் உள்ளிட்டோரை சர்வதேச மட்டத்துக்கு அழைத்து தண்டனை பெற்றக்கொடுக்க வேண்டும் என்ற முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொண்டு சர்வதேசம் ஏற்றுக்கொண்ட தரமிக்க புதிய சட்டமூலத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை 2015ஆம் ஆண்டே ஆரம்பித்துவிட்டோம். ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகிய இரண்டு பதவிகளும், அரசியல் பதவிகளாக இருப்பதால் சட்டம் முறைகேடாக பயன்படுத்தப்படுதல் மற்றும் பிரகடனமொன்றின் அடிப்படையில் நபரொருவரை குற்றவாளியாக்குவது போன்ற இரு பிரச்சினைகளையும் அடிப்படையாக கொண்டே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விரு விடயங்களும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் இடம்பெற்றவையாகும். தடுப்புக்காவலில் வைக்கும் அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து நீக்கி பிரதி பொலிஸ் மா அதிபருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, பயங்கவரவாத செயற்பாட்டில் நபரொருவர் ஈடுபட்டிருக்கிறார் என்பதற்கான போதியளவு சாட்சி இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத்துக்கு அறிவித்துவிட்டு 24 மணிநேரத்துக்குள் குறித்த நபரை கைது செய்து 3 மாதங்களுக்கு தடுப்புக்காவலில் வைக்க முடியும். அதன்போது விசாரணை அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு வருடம் வரையில் இந்த தடுப்புக்காவலை நீடிக்க முடியும். நீதவான் ஒருவரின் உத்தரவின்றி பிரதி பொலிஸ் மா அதிபரினால் முன்னெடுக்க முடியாது.

ஊடக தகவல்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களும் இந்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்ப்பு ஆர்ப்பாட்ட செயற்பாடுகள் குறித்தும் இந்தச் சட்டத்தின் ஒவ்வொரு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரமே பொருத்தமானதாக இருக்கும் என்பது இரண்டாவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாவது உறுப்புரையில் எவ்வாறான செயற்பாடுகள் பயங்கரவாத செயற்பாடுகளாக அமையும், அதற்கு எவ்வாறான தண்டனைகள் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ்விரு உறுப்புரைகளை அடிப்படையாக கொண்டே ஏனைய சகல ஏற்பாடுகளையும் புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், இந்த சட்டமூலத்தை விமர்சிப்பதற்காக முன்வைக்கும் சகல விடயங்களையும், தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டத்தினூடாக முடியும். அடிப்படை உரிமை என்பது உயிரிழந்த மக்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொடுப்பதற்கானதல்ல. வாழும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டியதே எங்களின் கடமையாகும். பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை என்று குறிப்பிடுகிறார்கள் என்றால், ரணில் மீது நம்பிக்கை என்பதே அதன் பொருளாகும். மக்கள் சார்பில் சிந்தித்தே இந்த சட்டமூலத்தை தயாரித்துள்ளோம்.

ஏப்ரல் 4ஆம் திகதி இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தேன். 06ஆம் திகதியுடன் நீதிமன்ற விடுமுறை காலம் ஆரம்பமானதால், இந்த விடுமுறை காலப்பகுதிக்குள் இதனை மீளாய்வு செய்ய நேரத்தை ஒதுக்கி தருமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரியிருந்தார்கள். அதற்கமைய, எதிர்வரும் 25ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் இதில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினால் அதற்கு தயாராக இருக்கிறோம்.

பயங்கரவாத செயற்பாடுகளுக்காக ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்கினால், ஊடக பிரசாரம் வழங்கப்படுமாக இருந்தால் அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த பிரசாரத்தில் உண்மைத் தன்மை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, அந்த ஊடக பிரசாரம் பயங்கரவாத செயற்பாட்டுடன் தொடர்புபட்டிருந்தது, இதன் பின்னணியில் பயங்கரவாத செயற்பாடுகள் இருக்கிறதை அறியாமல் பிரசாரம் செய்திருந்ததால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் இந்த சட்டத்துக்கு உட்படுத்த முடியாது. ஆனால், தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத செயற்பாடு என்ற அடிப்படையில் பொலிஸார் ஊடகவியலாளர்களை விசாரணைக்குட்படுத்த முடியும். இதனை தவிர்த்துக்கொள்வதற்காகவே இந்த புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றார்.

## அன்னை...

தியாகத்தீபம் திலீபனின் நினைவிடத்தில் இன்று (19) இடம்பெறவுள்ளது.

அன்னை ஈகைச் சாவினைத் தழுவிக்கொண்ட நேரமான காலை 8.45 மணி முதல் தியாகத்தாயின் உருவப்படத்திற்கு பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இறுதி நினைவேந்தல் நிகழ்வு மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இந்த நினைவேந்தலில் ஈகைச்சுடரினை தியாகத்தாய் அன்னை பூபதியின் பேத்தி ஏற்றிவைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்,...

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருப்பதுடன், கடந்த காலங்களில் இத்திணைக்களம் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றை ஆராயும் நோக்கில் பொலிஸ் திணைக்களம் எதிர்வரும் 26ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருப்பதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

## எரிபொருள்...

எதிர்காலத்தில் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலத்திற்கான எரிபொருள் ஒதுக்கீடு ஏப்ரல் 4 முதல் அதிகரிக்கப்பட்டது. இதன்படி, முச்சக்கரவண்டிகளுக்கான 5 லீற்றர் கோட்டா 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கான 4 லீற்றர் எரிபொருள் 7 லீற்றராகவும் அதிகரிக்க அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் பஸ்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 60 லீற்றராகவும், கார்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றராகவும், லொறிகளுக்கு எரிபொருள் ஒதுக்கீடு 50 லீற்றரிலிருந்து 75 லீற்றராகவும், வேன்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கோல்பேஸில்...

அதன் பிரகாரம் நாளை (20) முதல் அமுலுக்கு வரும் வகையில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த ஏனைய இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள், இதர நடவடிக்கைகளுக்கு காலிமுகத்திடலில் தடைவிதிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

சமூகப் பொறுப்பு நிதி கருத்திட்டமாக காலிமுகத்திடலை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளதுடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திக்காக 220 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அங்கு கடந்த போராட்ட காலங்களில் ஏற்பட்ட சேதங்களைப் புதுப்பிப்பதற்காக மாத்திரம் 6.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இசை நிகழ்ச்சிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடும் வேறு பல செயற்பாடுகளால் இத்திடல் தொடர்ந்து சேதமடைவதாக அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சமய நிகழ்வுகள் தவிர்ந்த காலிமுகத்திடலின் எழிலுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்காதிருக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

## தீவிரவாத...

மூலம் இளைஞர்களிடையே ஏற்படும் விரக்தியை பயன்படுத்தி தீவிரவாத அரசியலை ஊக்குவிக்க சில அரசியல் குழுக்கள் திட்டமிட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கையொன்று சுட்டிக்காட்டியுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கல்வியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த புலனாய்வு அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டது. அதில் விடைத்தாள் ஆய்வுப் பணிகளை தாமதப்படுத்தி 18, 19 மற்றும் 20 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே அசௌகரியத்தை ஏற்படுத்த, தீவிரவாத அரசியல் குழுக்கள் முயற்சித்து வருகின்றன.

விடைத்தாள் ஆய்வுசெய்யும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஆசிரியர் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த பணியை நிறைவு செய்வதற்காக 19 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஏலவே, க.பொ.த. உயர்தரத்துக்கான செயன்முறை பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். விடைத்தாள் மீளாய்வு பணிகள் தாமதமடைதலை தவிர்ப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. விரைவில், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளம் இப்பணிகளில் ஈடுபடும் என எதிர்பார்த்துள்ளோம்.

அரசியல் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தமது தனிப்பட்ட நலன்களை கருத்திற்கொள்ளாமல் இதனை ஒரு தேசிய தடையாக கருத்திற்கொள்ள வேண்டும். க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3இலட்சத்து 50ஆயிரம் மாணவர்களும் 6 இலட்சம் மாணவர்கள் க.பொ.த சதாரண தரப்பரீட்சைக்கும் தோற்றியுள்ளனர். திணைக்களத்தால், இரண்டு பிரதான பரீட்சைகளுக்கிடையே இடைவெளியை ஏற்படுத்துவதற்காக சாதாரணதரப் பரீட்சைகள் இரண்டு வாரகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எனவே, தொழிற்சங்கங்கள் மீண்டும் விடைத்தாள் மீளாய்வுப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என கல்வியமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இளஞ்சிவப்பு...

ரோடமைன் பி என்பது ஆடை மற்றும் காகித அச்சிடும் தொழில்களில் நிறமியாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளாகும், மேலும் இது களைக்கொல்லிகளை நிறமாற்றம் செய்யப் பயன்படுத்தப்படும் செயற்கை சாய இரசாயனமாகும். எனவே, உண்ணக்கூடிய சுண்ணக்கட்டியின் நிறத்தை மாற்ற இதுபோன்ற இரசாயனத்தைப் பயன்படுத்துவது கடுமையான சமூகக் குற்றம் என்று விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு இளங்கலை மாணவரான ஹஷான் பிரியந்த, சிரேஷ்ட பேராசிரியர் சுரங்கி யசவர்தன, சிரேஷ்ட பேராசிரியர் பிரதீப் ஜயவீர, பேராசிரியர் மஞ்சுளா வீரசேகர மற்றும் கலாநிதி சஜித் எதிரிசிங்க ஆகியோரின் உதவியுடன் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

## கூட்டு அரசியல்...

இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லர் கோயபல்ஸைப் பயன்படுத்தி ஊடகங்கள் மூலம் பொய்களை பரப்பி சமூகமயப்படுத்தியது போன்று தற்போதைய இலங்கை ஜனாதிபதியும் பொய்ப் பிரசாரம் செய்யும் கூட்டு அரசியல் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (18) தெரிவித்தார்.

உண்மையான ஊடகவியலாளர்களை கூட இழிவுபடுத்தி, தங்களை ஊடகவியலாளர்கள் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு குழுவின் மூலம் உண்மைகளை பொய்யாகவும், பொய்களை உண்மையாகவும் மாற்றும் பெரும் பிரசாரம் செயற்படுத்தப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் பதவியை பெற்றுக் கொள்ள, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடியதாக தற்போதைய அரசாங்கம் பொய்யான செய்திகளை உருவாக்கி வருவதாகவும், மக்கள் ஆணை இல்லாத, மக்களால் நிராகரிக்கப்பட்ட தற்போதைய அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இணையாது எனவும், எனவே இவ்வாறான பொய்யான மற்றும் போலியான செய்திகளை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

பிரதமர் பதவி தொடர்பாகவோ அல்லது தேசிய அரசாங்கம் தொடர்பாகவோ அல்லது அமைச்சுப் பதவிகள் தொடர்பாகவோ தானோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியோ எந்தவித கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை எனவும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கோயபல்ஸ் கொள்கையை கடைப்பிடித்து பெரும் போலி ஊடக பிரசாரத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு பயமெனவும் முடியுமானால் கிட்டிய காலத்தில் பாராளுமன்ற தேர்தலையோ அல்லது ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது தற்போது நிதி ஒதுக்க நழுவி வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையோ நடத்துமாறு தான் தற்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவ்வாறு தேர்தலை நடத்தும் போது உண்மையான மக்கள் ஆணை எங்குள்ளது என்பதை நன்றாக புரிந்து கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் வாக்குரிமைக்கு பெறுமானம் சேர்க்கும் விடயத்தில் என்றும் முன்நிற்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் ஆணையற்ற தற்போதைய அரசாங்கத்துடன் பணத்துக்கும் சலுகைகளுக்கும் அமைச்சுப் பதவிகளுக்கும் விலைபோகும் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியிலோ இல்லை எனவும் என்றும் மக்கள் ஆணையே உயர்வானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மே முதல்...

குறித்து பயணிகள் மூலம் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி, அரை சொகுசு பஸ்களை 'பொது' அல்லது 'சொகுசு' பஸ்களாக மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதுகுறித்து அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 430 அரை சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிலையில் அவற்றை 'பொது' அல்லது 'சொகுசு' பஸ்களாக மாற்றுவதற்கு பஸ் உரிமையாளர்களுக்கு இலவச வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடைகிறது என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இத்தீர்மானத்துக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.


# வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| SP-CAN - 4XXX | RU3-1001601 | MOTOR CAR | HONDA DAA-RU3 VEZEL |
| CP-CAL - 4XXX | MA3EUA61S00714685 | MOTOR CAR | SUZUKI ALTO LXI 800 |
| NP-KK - 9XXX | LKHBG2CJ49AW04078 | MOTOR CAR | MICRO TREND |
| WP-CAL - 4XXX | MAT612247FKH13388 | MOTOR CAR | TATA NANO TWIST |
| 18 - 3XXX | JF1AC1JR0CB618983 | MOTOR CAR | SUBARU JF1AC |
| 14 - 0XXX | HB11872621 | MOTOR CAR | NISSAN SUNNY |
| WP-KY - 4XXX | GP2-3117012 | MOTOR CAR | HONDA FIT |
| 42 - 0XXX | BU37004503 | MOTOR LORRY | TOYOTA BU37 |
| WP-HI - 8XXX | DB52T126511 | MOTOR LORRY | SUZUKI GD DB52T |
| UP-LK - 9XXX | LVBV3JBB1CE191682 | LIGHT MOTOR LORRY | FOTON BJ1036V-3JB3-R |
| SP-PV - 8XXX | MA1FA2HRRD6B24588 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| SP-PS - 8XXX | MA1FA2HRRC6A12123 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| EP-PX - 9XXX | MAT445235EZR10518 | MINI TRUCK | TATA ACE EX2 |
| WP-PY - 4XXX | LVAV1JAB4EE407233 | MINI TRUCK | FOTON BJ1006V0JA3-2 |
| CP-PP - 9XXX | MA1ZP2GAAA1M70783 | MINI TRUCK | MAHINDRA BOLERO MAXI TRUCK |
| NW-PU - 9XXX | MA1FA2HRRD6A20041 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| UP-PV - 6XXX | LGHT1A178D9801254 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| SG-DAC - 5XXX | LVZKN9170FC119821 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| EP-DAC - 5XXX | MAT491011F6R18999 | MINI TRUCK | TATA ACE EXPRESS CDI |
| WP-PT - 0XXX | MA1FA2HRRC6C24343 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| SP-PW - 9XXX | MAT445235DZR78381 | MINI TRUCK | TATA ACE EX2 |
| SG-PV - 6XXX | MAT491006DJR07690 | MINI TRUCK | TATA ACE ZIP |
| SG-DAC - 5XXX | MA1KA2UBEF3L83089 | MINI TRUCK | MAHINDRA JEETOS6 16 |
| SG-DAC - 0XXX | MBX0001LBPG239870 | MINI TRUCK | PIAGGIO APE TRUCK PLUS |
| EP-DAA - 4XXX | MBX0001LBPG239876 | MINI TRUCK | PIAGGIO APE TRUCK PLUS |
| EP-PU - 2XXX | MAT445224CZR78174 | MINI TRUCK | TATA ACE EX |
| WP-HG - 1XXX | S200V-0005864 | DUAL PURPOSE | DAIHATSU HIJET |
| 50 - 2XXX | LH30V378638 | DUAL PURPOSE | TOYOTA LH30V |
| 254 - 1XXX | CR41-0013166 | DUAL PURPOSE | TOYOTA CR41 |
| NC-PC - 6XXX | VWME25079642 | DUAL PERPOSE | NISSAN CARAVAN |
| EP-RF - 0XXX | 2014M50X0471 | TRACTOR - 4 WHEEL | KIOTI D84510 |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2023 ஏப்ரல் 19, 20ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஏப்ரல் 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2023 ஏப்ரல் 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT


## போர் விமானத்துக்கு...

அமைச்சரவையை மீறி எடுக்கப்படமாட்டாது. எனவே, கபீர் தாக்குதல் விமானத்தை மறுசீரமைப்பு செய்வதற்காக 49 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பவுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (18) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கபீர் தாக்குதல் விமானம் போன்றவற்றின் மறுசீரமைப்பு செயற்பாடுகள் போன்றவை அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரமே பாதுகாப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்படும். மக்களின் உயிர்களையும், அரச சொத்துகளையும் பாதுகாக்க வேண்டியதே ஒவ்வொரு அரசாங்கத்தினதும் கடமையும் பொறுப்புமாகும்.

இதுதொடர்பான தீர்மானங்கள் அமைச்சரவையில் கலந்துரையாடுவதற்கு முன்னர் தேசிய பாதுகாப்புச் சபையிலேயே பேசப்படும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய, அதனை அமைச்சரவைக்கு அறிவித்தன் பின்னர் அதுதொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கபீர் தாக்குதல் விமானத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா, அந்த நிதி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளதா போன்ற விடயங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்ததன் பின்னர் இதுதொடர்பான தகவல்களை வெளியிட எதிர்பார்க்கிறேன் என்றார்.

## தொழிற்சங்க...

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளில் பல்கலைக்கழகங்களை இணைத்துக்கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (18) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் நாட்டில் தேசிய மற்றும் மத்திய கல்லூரிகளில் கல்விகற்றே இன்று இந்த நிலையை அடைந்துள்ளார்கள். அப்போதிருந்த விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இதுபோன்ற தீர்மானங்களை எடுத்திருந்தால் இவர்கள் இன்று இந்த நிலையை அடைந்திருக்கமாட்டார்கள்.

ஊழியர் பிரிவிலுள்ள அடிமட்ட ஊழியர் தொழிற்சங்கம் கூட இதுபோன்ற தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்காது என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

ஆனால், சர்வதேச ஒப்பந்தங்களை புறந்தள்ளிவிட்டு, அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுத்திருந்தால் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆரம்பக்கட்ட கடனுதவியைக் கூட பெற்றுக்கொண்டிருக்க முடியாது. தம்மால் முடிந்த சகல விடயங்களையும் அரசாங்கங்கள் செய்யும். செய்ய முடியாது என்ற விடயங்களை செய்ய முடியாது.

ஏனைய தரப்பினரும் இந்த வரிக்கொள்கையிலுள்ள பிரச்சினைகள் குறித்து நாணய நிதியத்துக்கு விளக்கமளித்திருந்தார்கள். அடுத்தக் கட்ட பேச்சுவார்த்தையின்போது ஏதாவது நிவாரணம் வழங்க முடியுமென்றால், முதலில் அரச ஊழியர்களுக்கான வருமான வரிக்கான நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதாக ஜனாதிபதியும் அறிவித்திருந்தார். இந்த சகல விடயங்களையும் அறிந்தும் மாணவர்களை பணயக் கைதியாக கொண்டு, தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுப்பது அநீதியான செயற்பாடாகும். இது தவறான செயற்பாடாகும்.

புலமைப் பரிசில், சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான கற்கை நெறிகளை தேசிய கல்வி நிறுவனமே தயாரிக்கிறது. கற்கை நெறிகளை நியமித்ததன் பின்னர் அவற்றை மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிப்பது என்று கற்பித்தல் வழிகாட்டல்களை கல்வி அமைச்சே தீர்மானிக்கின்றது. ஆகவே உயர்தரப் பரீட்சையை நடத்துதல், விடைத்தாள் திருத்தப்பணிகளை தேசிய கல்வி நிறுவனமும் கல்வித்துறைசார்ந்தவர்களும் இதனை பொறுப்பேற்றுக்கொண்டு, பல்கலைக்கழகங்களை இந்த செயற்பாட்டில் இணைத்துக்கொள்ளாவிட்டால் இந்த பிரச்சினை ஏற்படாது. ஒருசில நாடுகளில் பாடசாலை பரீட்சைகளை தனியார் நிறுவனங்களே நடத்துகின்றன. ஆகவே, இதுதொடர்பில் சிந்தித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.


# மன்னிப்பு கோரும் அறிவிப்பு

இலக்கம் 50, மல்காந்தி ஹுலுதாகொட வீதி, கல்கிஸையில் வசிக்கும் முஹம்மட் நுஹ்மான் முஹம்மட் சல்மான் (தேசிய அடையாள அட்டை எண் 197921202116) ஆகிய நான் இலக்கம் 52/13A, இறப்பர் வத்த வீதி. நிகாபே, தெஹிவளையில் அமைந்துள்ள மற்றிக்ஸ் லைப்கெயார் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், இத்தால் அறிவிப்பது "நானும் இந்நிறுவனமும் அதிகாரசபையில் பதிவு செய்யாமலும் அல்லது அதிகாரசபையினது செல்லுபடியான உரிமம் பெறப்படாலும் மருந்து இறக்குமதி செய்த குற்றத்திற்காக குற்றவாளிகளாக காணப்படுகிறோம் என்றும்.

மேலும் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் பதியப்பட்ட வழக்கு இலக்கம் 14280/S/21 என்ற வழக்கில் தண்டப்பணமாக ரூபா 3,50,000 என் மீது விதிக்கப்பட்டது என்றும், அத்தண்டப்பணத்தை முறையாக நீதிமன்றத்தில் செலுத்தினேன் என்றும் அறியத்தருகின்றேன். மேலும், இலங்கை வாழ் பொதுமக்களிடம் மேற்குறிப்பிட்ட குற்றத்திற்காக மன்னிப்பு கோருகிறேன் என்றும் இதன் பிறகு இத்தகைய குற்றத்தினை புரியமாட்டேன் என்றும் நான் உறுதியளிக்கிறேன்.

இலக்கம் 34/7, ஹுலுதாகொட கார்டன்ஸ் முத்து முஹம்மட் முஹம்மட் ஜுப்ரான் (தேசிய அடையாள அட்டை எண் 197126602581) ஆகிய நான் இலக்கம் இலக்கம் 52/13A, இறப்பர் வத்த வீதி. நிகாபே, , தெஹிவளையில் அமைந்துள்ள மற்றிக்ஸ் லைப்கெயார் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், இத்தால் அறிவிப்பது "நானும் இந்நிறுவனமும் அதிகாரசபையில் பதிவு செய்யாமலும் அல்லது அதிகாரசபையினது செல்லுபடியான உரிமம் பெறப்படாலும் மருந்து இறக்குமதி செய்த குற்றத்திற்காக குற்றவாளிகளாக காணப்படுகிறோம் என்றும்.

மேலும் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் பதியப்பட்ட வழக்கு இலக்கம் 14280/S/21 என்ற வழக்கில் தண்டப்பணமாக ரூபா 3,50,000 என் மீது விதிக்கப்பட்டது என்றும், அத்தண்டப்பணத்தை முறையாக நீதிமன்றத்தில் செலுத்தினேன் என்றும் அறியத்தருகின்றேன். மேலும், இலங்கை வாழ் பொதுமக்களிடம் மேற்குறிப்பிட்ட குற்றத்திற்காக மன்னிப்பு கோருகிறேன் என்றும் இதன் பிறகு இத்தகைய குற்றத்தினை புரியமாட்டேன் என்றும் நான் உறுதியளிக்கிறேன்.

இலக்கம் 50, மல்காசந்தி ஹுலுதாகொட வீதி, கல்கிஸையில் வசிக்கும் ஹம்மட் நுஹ்மான் முஹம்மட் ரிசான்(தேசிய அடையாள அட்டை எண் 780401990V) ஆகிய நான் இலக்கம் 52/13A, இறப்பர் வத்த வீதி. நிகாபே, தெஹிவளையில் அமைந்துள்ள மற்றிக்ஸ் லைப்கெயார் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், இத்தால் அறிவிப்பது "நானும் இந்நிறுவனமும் அதிகாரசபையில் பதிவு செய்யாமலும் அல்லது அதிகாரசபையினது செல்லுபடியான உரிமம் பெறப்படாலும் மருந்து இறக்குமதி செய்த குற்றத்திற்காக குற்றவாளிகளாக காணப்படுகிறோம் என்றும்.

மேலும் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் பதியப்பட்ட வழக்கு இலக்கம் 14280/S/21 என்ற வழக்கில் தண்டப்பணமாக ரூபா 3,50,000 என் மீது விதிக்கப்பட்டது என்றும், அத்தண்டப்பணத்தை முறையாக நீதிமன்றத்தில் செலுத்தினேன் என்றும் அறியத்தருகின்றேன். மேலும், இலங்கை வாழ் பொதுமக்களிடம் மேற்குறிப்பிட்ட குற்றத்திற்காக மன்னிப்பு கோருகிறேன். அத்துடன் இந்த வழக்கில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய இந்த குற்றத்துக்காக பகிரங்க பத்திரிகை விளம்பரம் ஊடாக மன்னிப்பு கோருகிறேன்.


## இராஜதந்திர...

சீனாவின் தனியார் நிறுவனமொன்றினாலேயே இதுதொடர்பான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைகள் தொடர்பில் விவசாய அமைச்சு ஆராய்ந்து வருகிறது. ஆனால், விலங்குகளை உயிருடன் இறைச்சிக்காகவோ அல்லது வேறு செயற்பாடுகளுக்காகவோ ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறை எந்தவொரு நாடுகளிலும் பின்பற்றப்படுவதில்லை என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குரங்குகளை ஏற்றுமதி செய்வது குறித்து இலங்கை அரசுக்கும் சீன அரசுக்கும் எந்தவொரு பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை. இறக்குமதி, ஏற்றுமதி முறையின் கீழ் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படும். சர்வதேச விற்பனை செயற்பாடுகளின்போது பொருட்கள், சேவைகள், விலங்குகள் உள்ளிட்ட சகல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் யோசனைகள் முன்வைக்கப்படும்.

சீனாவிலுள்ள தனியார் நிறுவனமொன்றினால், அங்குள்ள 16 விலங்கு சரணாலயங்களுக்கு தேவையான குரங்குகளை பெற்றக்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் விவசாய அமைச்சரிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில், வன பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய தரப்பினரின் தலைமையில் குழுவொன்றை நியமித்து இதுபோன்ற கொடுக்கல் வாங்கலை முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக விவசாய அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்தார்.

எந்தவொரு நாட்டிலும் அவ்வாறு சுதந்திரமாக உயிரினங்களை கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுத்த முடியாது. எம்மை விட சீனாவில் இதுதொடர்பில் கடுமையான சட்டத்திட்டங்கள் இருக்கின்றன. உயிருடன் இருக்கும் விலங்குகளை இறைச்சிக்காகவோ அல்லது வேறு செயற்பாடுகளுக்காகவே அனுப்பிவைப்பதற்கான நடைமுறை எந்தவொரு நாட்டிலும் இல்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்கு அரசுகளும் அனுமதி வழங்குவதில்லை என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 6ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** கணவன்-மனைவி உறவில் விரிசல்கள் ஏற்படலாம், வாகனம் செலுத்துவதில் மிகுந்த அக்கறை வேண்டும்.

**ரிஷபம்:** புதிய நண்பர்களின் சந்திப்பால் உதவிகள், இலாபங்கள் உண்டு. காதலியை சந்தித்து உல்லாசமாக இருப்பீர்கள்.

**மிதுனம்:** தொழில் வியாபாரத்தில் அக்கறையோடு செயல்படுங்கள். ஏனோ தானோ போக்கால் சில நட்டங்களை அடைவீர்கள்.

**கடகம்:** வெளியிடப் பயணங்களால் சற்று தொல்லைகளை அனுபவிப்பீர்கள். உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**சிம்மம்:** உங்கள் சேமிப்பிலிருந்த பணம் விரயமாகும் நாள். முடிந்தவரை செலவுகளை குறைத்துக் கொள்ளப்பாருங்கள்.

**கன்னி:** கூட்டுறவால் சில சிக்கல்களையும் தொந்தரவுகளையும் அடைவீர்கள். வீண் விவாதங்கள் வேண்டாம்.

**துலாம்:** தொழில் வியாபார முன்னேற்றங்கள் ஏற்படும். எதிரிகளால் எதிர்பாராத இலாபங்களை அடைவீர்கள்.

**விருச்சகம்:** தொழில் ரீதியில் எதிர்ப்பார்த்துக் காத்திருந்த இலாபங்கள் அமையாது. அதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாவீர்கள்.

**தனுசு:** இதய நோயாளர்கள் உடல் நலத்தில் இன்று அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். வாகனம், வீடு இவற்றால் செலவுகள் உண்டு.

**மகரம்:** நீங்கள் நினைத்தவர்களை மடக்கிப் பிடித்து வேலை வாங்குவீர்கள். பழையக் கடன்களை இன்று அடைப்பீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் வீண் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சிக்காதீர்கள், அமைதியைக் கையாளுங்கள்.

**மீனம்:** வீண் பயத்தினையும் டென்ஷனையும் விட்டுவிட்டு தைரியமாக நடைபோடுங்கள், அனைத்தும் உங்கள் வசப்படும்.

**திதி** : சதுர்த்தசி மு.ப.11.24 வரை பின் அமாவாசை

**நட்சத்திரம்** : ரேவதி பி.ப.11.53 வரை பின் அசுவினி

**யோகம்** : மரணயோகம் முழுவதும்

**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 8.59 – 9.59 மணிவரை

**ராகு காலம்** : 11.59 – 1.29 மணிவரை

**எமகண்டம்** : 7.29 – 8.59 மணிவரை

**குளிகை** : 10.29 – 11.59 மணிவரை

**சந்திராஷ்டமம்** : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : அமாவாசை விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# புகையிலை - மது தொடர்பான தேசிய அதிகாரசபையினால் அச்சிடப்பட்ட 8313 துண்டுப்பிரசுரங்கள் மாயம்

## கணக்காய்வு அலுவலக அறிக்கையில் தகவல்

புகையிலை மற்றும் மது தொடர்பான தேசிய அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக தமிழ், சிங்கள மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் அச்சிடப்பட்ட ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 820 ஸ்டிக்கர், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளில், எட்டாயிரத்து 313 சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் காணாமல் போயுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அதுதொடர்பில் அதிகார சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்டிக்கர்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியாகும்போது மீதமாகியிருந்த போதிலும் அவை அதிகாரசபையின் நோக்கங்களுக்காக மேலும் பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் கணக்கறிக்கை தகவல்களை சமர்ப்பிக்கவில்லை என்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த அதிகாரசபையில் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட கள ஆய்வின்போது இந்தப் பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 75 ஆயிரத்து 650 வரையில் பல்வேறு ஸ்டிக்கர்கள், 47ஆயிரத்து 828 துண்டுப்பிரசுரங்கள், 13 ஆயிரத்து 346 சுவரொட்டிகள் இவ்வாறு அச்சிடப்பட்டுள்ளன.

இதேவேளை அதிகாரசபைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 மேசைக் கணினிகள், 05 மடிக்கணினிகள் மற்றும் 06 டெப்கள் பயன்படுத்தாதிருப்பதாகவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் பயிற்சி வேலைத்திட்டத்துக்கான தேவையை முறையாக அடையாளம் காணாமல் 2018ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான 119 பென்ரைவ்கள் நிறுவனத்தின் பயன்பாட்டுக்கு எடுத்திருக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மது தொடர்பான தேசிய அதிகார சபையின் 2021ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

# அநுராதபுரம் கள்ளஞ்சிய பகுதியில் பெண்ணொருவர் வெட்டிக் கொலை

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் கள்ளஞ்சிய மஹகனந்தராவ பகுதியிலுள்ள வீடொன்றில் பெண் ஒருவர் கழுத்து வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளதாக கள்ளஞ்சிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (17) இரவு 7.40 மணியளவில் மஹகனந்தராவ தக்குனுஇவுற பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

63 வயதுடைய மஹகனந்தராவ தக்குனுஇவுற பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

எதற்காக இக்கொலை இடம்பெற்றுள்ளது என்ற விடயம் இன்னும் தெரிய வராத நிலையில், கள்ளஞ்சிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'வசத் சிரிய 2023' புத்தாண்டு நிகழ்வுகளின் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அமைச்சுகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'வசத் சிரிய 2023' தமிழ் - சிங்களப் புத்தாண்டு போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலகத்தினால் அனைத்து அரச நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு நடத்தப்படவுள்ள 'வசத் சிரிய' தமிழ் - சிங்களப் புத்தாண்டு நிகழ்வுகள் ஏப்ரல் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரையில் கொழும்பு சங்கரில்லா கீரீன் திடலில் நடைபெறவுள்ளதோடு, அரச துறையினர், திறந்த பிரிவுகள், விருந்தினர் பிரிவு என்ற 03 பிரிவுகளின்கீழ் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் இடம்பெறவிருக்கும் அழகி, அழகன் தெரிவு, மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிளோட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன. அனைத்து விண்ணப்பங்களையும் www.pmd.gov.lk இணையப் பக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். 2023 ஏப்ரல் 21ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு Whatsapp ஊடாக அறிவிக்கப்படும். விண்ணப்பித்தல் மற்றும் பதிவுகளுக்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.

# தாலிக்கொடி செய்து தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டவர் கைது!

தாலிக்கொடி செய்து தருவதாகக் கூறி 12 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்துடன் தலைமறைவான நபர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருமணத்திற்கு தாலி செய்து தருவதற்காக குறித்த நபரிடம் 12 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகை நகை மற்றும் பணம் என்பவற்றை மணமகன் வீட்டார் வழங்கியுள்ளனர்.

நகை மற்றும் பணத்தினை பெற்றுக்கொண்டவர் திருமணத்திற்கு முதல் நாள் தாலியை தருவதாக உறுதியளித்துள்ளார்.

அதன் அடிப்படையில், திருமணத்திற்கு முதல் நாள் தாலியை வாங்கச் சென்றபோது, அவரது கடை மூடப்பட்டிருந்தது. அவருக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டபோது, தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து மணமகன் வீட்டார், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து இருந்த நிலையில், குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# வடகடல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறும்

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை





இந்திய அரசு, சீன நிறுவனம் மற்றும் இரு தனியார் நிறுவனங்களின் நிதி உதவியுடன் வடகடல் நிறுவனம் எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அதனை அடையக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நோத்சீ எனப்படும் வடகடல் நிறுவனத்திற்கான புதிய அலுவலகம் நேற்று (18) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்துவைக்கப்பட்டது. மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று இந்த நிகழ்ச்சிகள் சிறந்த ஆரம்பமாக இருக்குமென நம்புகிறேன். பொதுவாக பல அரச நிறுவனம் நீண்டகாலமாக நஷ்டத்தில் இயங்குவதால் அரசாங்கம் அவற்றை விசேடமான கண்காணிப்பில் செயற்படுத்துவதற்கு முடிவெடுத்திருக்கிறது.

இது உண்மையில் நிறுவனத்திற்கு தலைமைதாங்குபவர்கள் அவர்களின் அரசியல் பிரதிநிதிகள்தான் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும். இங்கு இந்த நிறுவனத்தையும் தனியார்மயப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசாங்கத்தில் முக்கியமான அமைச்சராக இருந்தாலும் அதில் எனக்கு இணக்கப்பாடு கிடையாது. அரசாங்கத்தின் கொள்கைகளையும் பணியாற்றும் ஊழியர்களையும் தனியாரையும் இணைத்து அமைச்சின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

இன்றிலிருந்து இந்த நிறுவனத்தை தலைவர் மற்றும் அதிகாரிகள் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வார்கள் என நம்புகிறேன்.

இந்த நிகழ்வில் இரு தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டுள்ளன. அவர்களிடம் தேவையான மூலப்பொருட்களை கடனாக வழங்குமாறும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன். அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அதுபோல இந்திய அரசாங்கத்திடம் 160 மில்லியன் ரூபா கடனாக கேட்டிருக்கிறோம். உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

அண்மையில் சீன நிறுவனம் ஒன்றுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது கடற்றொழிலாளர்களுக்கு 500 மில்லியன் ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். எனவே இந்த நிதியுதவிகளைக்கொண்டு, வடகடல் நிறுவனம் எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அதனை அடையக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் வேறு வேலைகள் இருந்ததன் காரணமாக இந்நிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் அவர்களின் ஆசீர்வாதத்துடனும் முழு ஒத்துழைப்புடனும் இதனை முன்னெடுத்துச் செல்ல முடியும் என நம்புகிறேன்" என்றார்.

# நாகபூசணி அம்மன் சிலை அகற்றும் விவகாரம்

## பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (18) இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்து அமைப்புகள் சார்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, இந்து அமைப்புகள் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகளும் முன்னிலையாகினர்.

குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கீடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி இருவரும் நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

எழுத்துமூல சமர்ப்பணங்களுக்காக வழக்கு எதிர்வரும் 04.05.2023ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

**சந்தேக நபரொருவர் கைது**

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் கர்ப்பிணிப்பெண் உள்ளிட்ட இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி, கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் நேற்று (18) தெரிவித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று இரவு 8.30 மணியளவில் வவுனியாவில் இருந்து பூவரசன்குளம் நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்ற 8 மாத கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது தாயார் மீது பம்பைமடுப் பகுதியில் வைத்து வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்கள் அணிந்திருந்த 6 அரைப் பவுண் நகை மற்றும் ஒன்றரை இலட்சம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப் பட்டிருந்தன. காயமடைந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் தாய் ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பூவரசன்குளம் பொலிஸார் 30 வயதுடைய இளைஞர் ஒருவரை கைதுசெய்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# முடிக்கப்படாத திட்டங்களின் பணிகளை முடிக்க திறைசேரியில் இருந்து 3,750 மில்லியன் ரூபா நிதி

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கிவைப்பு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு, கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத வேலைத்திட்டங்களை பூர்த்திசெய்வதற்காக திறைசேரியினால் 3,750 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

"உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை" வீடமைப்பு உதவித் திட்டத்தின் 50 வீதமான வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி 2021ஆம் ஆண்டு 12,231 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு அதில் 6039 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2022ஆம் ஆண்டு 1465 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 25 வீடுகளே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 1215 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 727 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் மினுவாங்கொடை தொகுதியில் மட்டும் 159 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 78 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, "உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை" வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம், இந்த வருட ஆரம்பத்தில் வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாத வேலைத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக திறைசேரியினால் 3,750 மில்லியன் ரூபா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, , "உங்களுக்கு வீடு – நாட்டுக்கு நாளை" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வேலைகளை ஆரம்பித்து பூர்த்திசெய்ய முடியாத அனைத்து வீடுகளையும் கட்டி முடிக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை வீடமைப்புத் திட்டம் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சியால் 2020இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சொந்த வீடு இல்லாத குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கானது. இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ், இலங்கையிலுள்ள அனைத்து 14022 கிராம சேவைப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவுக்கும் ஒரு வீடாக 14022 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டது.

# கொட்டடி பிள்ளையார் ஆலய விநாயகர் சிலை உடைப்பு







(வட்டுக்கோட்டை நிருபர்)

கொட்டடி பிள்ளையார் ஆலயத்தின் பிள்ளையார் சிலை காடையர்களால் உடைத்து எடுத்துச் செல்வதற்கு எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் ஆலயத்தின் முகப்பில் உள்ள பிள்ளையார் சிலை காடையர்களால் நேற்று முன்தினம் (17) உடைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் ஆலயத்தின் முகப்பில் உள்ள பிள்ளையார் சிலை உண்டியலுடன் காணப்படுகிறது.

இந்நிலையில் நேற்று (18) காலை வழிபடச் சென்ற ஒருவர் பிள்ளையார் சிலையின் கால் பகுதி உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார்.

இந்த சிலையும், அமைக்கப்பட்டிருக்கும் பீடமும் கம்பிகளால் பிணைக்கப்பட்டுள்ளதால் சிலையை அப்புறப்படுத்தும் முயற்சி கைகூடவில்லை என அடியார்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஏப்ரல் 19ஆம் திகதி, புதன்கிழமை

# கோல்பேஸ் தடை - சரியான முடிவா?

கொழும்பு – காலிமுகத்திடலில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த எந்தவொரு இசை நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் அல்லது பிற ஒன்றுகூடல்கள் என்பவற்றை நடத்த அனுமதி வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை வியாழக்கிழமை (20.04.2023) முதல் நடைமுறைக்கு வரும் வகையில், காலிமுகத்திடலில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த எந்தவொரு இசை நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் அல்லது பிற ஒன்றுகூடல்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுமக்கள் இடையூறின்றி நேரத்தை செலவிடும் இடமாக மாத்திரம் காலிமுகத்திடலைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது

***"சமூகப் பொறுப்பு நிதி கருத்திட்டமாக காலிமுகத்திடலை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளதுடன், இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குறித்த அதிகாரசபை 220 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.***

***கடந்த போராட்ட காலங்களில் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்களைப் புதுப்பிப்பதற்காக மாத்திரம் 6.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் சுதந்திரமாகப் பொழுதைக் கழிப்பதற்கு இயலுமாகும் வகையில் இத்திடலைப் பயன்படுத்த வேண்டியிருப்பினும், இசை நிகழ்ச்சிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடும் வேறு பல செயற்பாடுகளால் இத்திடல் தொடர்ந்து சேதமடைவதுடன், இச்சுற்றுச்சூழலின் அழகையும், எழில் மிகுந்த தோற்றத்தையும் பேணிச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.***

***அதனால், 2023.04.20ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த, காலிமுகத்திடலின் எழில் மிகுந்த தோற்றத்திற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் அல்லது பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக காலிமுகத்திடலைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்காதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது."***

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை எடுத்த எடுப்பில் நோக்கினால் மக்களின் நன்மை கருதி எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமாகவே தெரியும். ஆனால், இதன் உள்ளர்த்தம் என்பது வேறு விதமாகவே இருக்கிறதென்பது நோக்கர்கள் கருத்து. காலிமுகத்திடல் என்பது இலங்கையின் வரலாறில் பெயர்பெற்ற இடம். காலிமுகத்திடலில் தமிழ்த் தலைவர்கள் தாக்கப்பட்ட வரலாறும் உண்டு.

தனிச் சிங்கள சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நாளில், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்ற கட்டடத்துக்கு முன்பாக (பழைய பாராளுமன்றக் கட்டடம் - இன்றைய ஜனாதிபதி செயலகம்) காலிமுகத்திடலில், தனிச் சிங்கள சட்டமூலத்தை எதிர்த்து அகிம்சை வழியில் போராட்டமொன்றை நடத்தினர்.

அமைதி வழியில் பாராளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகமிருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்களை ரௌடிகளும் காடையர்களும் தாக்கத் தொடங்கினர். சுற்றிவர பொலிஸ் காவலுக்கு நின்றபோதும், பொலிஸார் ரௌடிகளையும் காடையர்களையும் தடுக்கவில்லை. அமைதி வழியில் சத்தியாக்கிரகம் இருந்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். சிலர் பாராளுமன்றக் கட்டடமருகே உள்ள பேரவாவியில் காடையர்களால் தூக்கி எறியப்பட்டார்கள். அகிம்சை வழியில் எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்கள் இவ்வாறாக இம்சைப்படுத்தப்பட்டார்கள்.

அன்றைய பிரதமர் S.W.R.D.பண்டாரநாயக்க, பாராளுமன்றத்துக்கு தனது வாகனத்தில் வருகை தந்து, அவர் காலிமுகத்திடல் பகுதியைக் கடக்கும் போது, ஒரு பொலிஸ் அதிகாரி அவரை அணுகி,

''இங்கு பல காடையர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட சத்தியாக்கிரகிகளைத் தாக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனைத் தடுக்கவும், காடையர்களைக் கட்டுப்படுத்தவும் தாம் ஏதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமா?'' என வினவியபோது, S.W.R.D.பண்டாரநாயக்க அதன் சுவையை அவர்கள் உணரட்டும் என்று கூறிச் சென்றதாக வரலாற்றுத் தகவல்கள் உள்ளன.

தமிழ்த் தலைவர்களை தாக்கியதன் ஊழ்வினையோ என்னவோ, பல தசாப்தங்களின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்லவேண்டியேற்பட்டது. அதற்கும் காலிமுகத்திடலில் நடந்த போராட்டமே காரணமாகும். வரலாற்றில் காலிமுகத்திடல் பல கனதியான செய்திகளை இப்படித்தான் தந்துவிட்டிருக்கிறது. மக்கள் புரட்சி நாட்டில் ஏற்பட வித்திட்டது கோட்டாபயவுக்கு எதிரான காலிமுகத்திடல் போராட்டமே. அன்று கோட்டாவுக்கு எதிராக காலிமுகத்திடலில் போராட்டத்தை செய்வோரை அனுமதியுங்கள் என்று கூறிய அதே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, இன்று அரசியல் நிகழ்வுகளுக்கு அங்கு அனுமதி மறுத்திருப்பது அப்பட்டமான ஜனநாயக உரிமை மீறலாகும்.

மக்கள் எங்கு, எந்த இடத்தில் அரசியல் செய்யவேண்டும், எங்கு செய்யக்கூடாது என்ற தீர்மானத்தை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளமுடியாது. ஜனநாயகத்தின் பெயரில் அப்படியான சிந்தனையும் அரசுக்கு வரக்கூடாது. கோல்பேஸை மூடிவிட்டால் அல்லது அங்கு அரசியல் நிகழ்வுகளை நடத்த அனுமதி மறுத்தால் மக்கள் அணிதிரள வேறு இடங்களே இல்லையா? மக்கள் புரட்சி என்ற ஒன்று உருவாகும் நிலை வந்துவிட்டால் அது எப்படியும் எவ்விதத்திலும் உருவாகியே தீரும். கோட்டாவின் இறுதி நாட்களை மனதில் நினைத்தால் இதன் தாற்பரியம் ஒவ்வொருவருக்கும் புரியும்.

ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சியைப் பாதுகாக்க சர்வாதிகாரம் என்ற போர்வையை மெதுவாக கையில் எடுத்துக்கொண்டிருப்பது இந்த தீர்மானத்தினால் புலனாகிறது. அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தி மெதுவாக மேலோங்கும் என்று நம்பும் ரணில், ராஜபக்ஷமாரை மீண்டும் ஆட்சிக்குள் கொண்டுவரத் தடுமாறுகிறார். அதற்கு வரும் எதிர்ப்புகளை சமாளிக்கவே இந்த முன்னேற்பாடு. பாவம் ரணில், சீப்பை ஒளித்துவிட்டால் திருமணத்தை நிறுத்திவிடலாம் என்று நினைக்கிறார். இது சரியான தீர்மானமல்ல.

## இன்றைய நாளில்...

- **1818 – பிரான்சிய இயற்பியலாளர் அகஸ்டீன் பிரெனெல் 'ஒளியின் விளிம்பு விளைவு பற்றிய குறிப்பை' வெளியிட்டார்.**
- **1971 – முதலாவது விண்வெளி ஆய்வுகூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட்-1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.**
- **1975 – இந்தியாவின் முதலாவது செயற்கைக்கோள் ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.**
- **1988 – இந்திய ஆக்கிரமிப்பாளருக்கெதிராக மட்டக்களப்பில் 30 நாட்கள் உண்ணாநோன்பிருந்த நிலையில் அன்னை பூபதி இறந்தார்.**
- **1995 – சந்திரிகா - விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை முறிவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதனையடுத்து திருகோணமலைத் துறைமுகத்தில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.**
- **2011 – பிடல் காஸ்ட்ரோ கியூபா பொதுவுடமைக் கட்சியின் முதல் செயலாளர் பதவியிலிருந்து விலகினார்.**
- **2021 – ராவுல் காஸ்ட்ரோ கியூபப் பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலாளர் பதவியிலிருந்து விலகினார். இதன் மூலம் கியூபாவில் காஸ்ட்ரோ சகோதரர்களின் 62 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்தது.**

# தியாகதீபம் அன்னை பூபதி






அன்று 35 வருடங்களுக்கு முன், ஆம்.. மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் 1988ஆம் ஆண்டு இந்தியப்படைகள் முகாம்கள் அமைத்துத் தங்கியிருந்துகொண்டு சொல்லமுடியாத கொடுமைகளைச் செய்தன. தேடுதல் வேட்டை என்ற பெயரில் வீடு வீடாகப் புகுந்து வெறித்தாண்டவம் ஆடினார்கள். உடைமைகள் சூறையாடப்பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சந்தேகத்திற்குரிய இளைஞர்கள் உடனடியாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய இராணுவத்தினர் பெண்களிடம் மிருகத்தனமாக நடந்துகொண்டனர். பெண்கள் வெளியில் நடமாடவே அஞ்சினர்.

தியாகி திலீபன் காட்டிய வழியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதென அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

1 - இந்தியப்படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும்.

2 - விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து மாமாங்கப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக அன்னையர் முன்னணியின் உண்ணாநோன்புப் போராட்டம் தொடங்கப்பட்டது.

தொடக்கத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் இதை அலட்சியப்படுத்தினர். ஆனால், உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு ஆதரவாக மட்டக்களப்பு நகரில் மட்டுமன்று, மாவட்டம் முழுவதிலும் உள்ள பெண்களும் மாணவிகளும் ஆர்த்தெழுந்ததைப் பார்த்தவுடன் அவர்கள் திகைத்தனர். உண்ணாநோன்புப் போராட்டத்தைப் பார்க்கவும் ஆதரவு தரவும் மக்கள் அணி அணியாக அங்கு வரத்தொடங்கினார்கள். எனவே, இப்போராட்டத்தை திசைதிருப்ப பல வழிகளில் பலரும் ஈடுபட்டனர்.

அன்னையர் முன்னணி தங்கள் உண்ணாநோன்புப் போராட்டத்தை தொடர் உண்ணாநோன்புப் போராட்டமாக மாற்றித் தீவிரப்படுத்தியது. நாள்தோறும் ஏராளமான பெண்களும் மாணவிகளும் போராட்டத்தில் புதிய உத்வேகத்துடன் குதித்தனர். இது ஒரு மக்கள் போராட்டமாக வெடித்தமை கண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அதிர்ச்சியடைந்தார்.

"இந்திய அமைதிப்படை இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே போராடுகிறது" என வானொலி மூலம் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு அவருடைய அறியாமையைக் காட்டியது. மக்கள் வேறு, விடுதலைப்புலிகள் வேறல்ல. மக்களிலிருந்தே புலிகள் தோன்றி மக்களைக் காக்கப் போராடுகிறார்கள் என்ற உண்மையை அவர் உணரவில்லை. எனவே, அவருடைய அறிவிப்பால் அன்னையர்கள் மனம் மாறிவிடவில்லை.

1988ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் நாளன்று பேச்சுவார்த்தைக்கு வரும்படி அன்னையர் முன்னணியை இந்திய இராணுவத்தினர் அழைத்தனர். அதனை ஏற்று அன்னையர்கள் திருகோணமலைக்குச் சென்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

பிரிகேடியர் சண்டேஸ் என்னும் உயர் அதிகாரி இந்திய அரசு சார்பில் கலந்துகொண்டு "புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும். அதற்குப் பின்னரே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும்" என்று கூறினார்.

"எங்கள் நகைகளைக் கொடுத்து எங்களைக் காக்க எமது பிள்ளைகள் வாங்கிய ஆயுதங்களைக் கேட்பதற்கு நீங்கள் யார்?" என்ற சூடான வினா அன்னையரிடமிருந்து கிளம்பியது.

பிரிகேடியர் சண்டேஸ் வாயடைத்துப் போனார்.பேச்சுவார்த்தை முறிந்தது. உண்ணாநோன்புப் போராட்டம் தொடர்ந்தது.

அன்னையர் முன்னணியினர் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். பெப்ரவரி 10ஆம் நாளன்று கொழும்பில் இந்தியத் தூதுவர் டிக்ஷித் அன்னையர் முன்னணியினர்களுடன் பேசினார். ஆயுதங்களைக்கொடுக்க வேண்டும் என்ற பழைய பல்லவியையே பாடினார். அவருடைய மிரட்டலுக்கு அன்னையர் அஞ்சவில்லை. மீண்டும் பேச்சுவார்த்தை முறிந்தது.

ஆத்திரமடைந்த இந்திய இராணுவம் மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தைச் சுற்றி வளைத்தது. அப்பகுதியில் இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது. பெப்ரவரி 12, 13, 14 ஆகிய மூன்று நாட்களும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. யாரும் வெளியில் நடமாடக்கூடாது. நடமாடுபவர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்கள் என எச்சரிக்கை விடப்பட்டது.

அன்னையர் முன்னணிக்கு எதிரான இராணுவ அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. அன்னையர்களும் பதிலடி கொடுக்கத் திட்டமிட்டார்கள்.

அடுத்தகட்டப் போராட்டமாக சாகும்வரை உண்ணாநோன்பு இருப்பதென முடிவுசெய்தார்கள்.

ஆனால், அந்த வாய்ப்பைத் தனக்கு தாருங்கள் எனப்போராடினார் அன்னம்மா டேவிட்.

இணைபிரியாத தோழிகளாக இருந்து அன்னையர் முன்னணியை வழிநடத்திய அந்த இரு தாய்மாரும் தாயகத்திற்காக உயிரைத் தியாகம் செய்யும் உன்னதமான வேள்வியில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. இருவரும் போட்டிபோட்டனர். வேறுவழியில்லாமல் சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டது. அன்னம்மா டேவிட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் நாள் மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக அன்னம்மா டேவிட் சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

சைவக்கோயில் முற்றத்தில் கிறிஸ்தவத்தாய் உண்ணாநோன்பிருந்த காட்சி, மதங்கள் வேறாயினும் அனைவரும் தமிழரே என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டியது.

அன்னம்மாவிற்கு ஆதரவாகத் தமிழீழமெங்கும் மக்கள் அனுதாப உண்ணாநோன்புகளிலும் ஊர்வலங்களிலும் ஈடுபட்டனர். கிராமம் கிராமமாக இந்த அலை பரவியது. வழக்கம் போல் இராணுவம் மிரட்டியது. அன்னம்மா சாக நேர்ந்தால் அன்னையர் முன்னணி மீது கொலைவழக்குப் போடப்போவதாக எச்சரித்தது. எதுவும் பலிக்கவில்லை.

கடைசியாக சூதுத்திட்டமொன்று வகுக்கப்பட்டது. அன்னம்மாவின் பிள்ளைகளைக் கைதுசெய்து மிரட்டியும், ஆசைவார்த்தை காட்டியும் ஒரு கடிதத்தில் கையெழுத்து வாங்கப்பட்டது. அன்னம்மாவைப் பலவந்தமாக உண்ணாநோன்பில் ஈடுபடுத்தி அரசியல் ஆதாயம்தேட முயற்சி நடப்பதாகவும் எனவே, அவரைக் காப்பாற்றி மீட்டுக்கொடுக்கும்படி இந்திய இராணுவ அதிகாரியிடம் அக்கடிதம் முறையிட்டது.

இப்பொய்யான கடிதத்தை ஆதாரமாகக் காட்டி இந்திய இராணுவம் அன்னம்மாவைத் தூக்கிச்சென்றது. இந்த நயவஞ்சக நாடகத்தின் விளைவாக அன்னையர் முன்னணி மீது பூசப்பட்டிருக்கும் களங்கத்தைத் துடைத்தெறியச் சபதம் செய்து களத்தில் இறங்கினார் அன்னை பூபதி. அதேவேளை அன்னம்மாவிற்கு நேர்ந்ததைப்போல தனக்கும் நேர்ந்துவிடக் கூடாதென்பதற்காக ஒரு கடிதத்தை தானே எழுதிக்கொடுத்தார்.

"நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாநோன்பு இருக்கிறேன். நான் நினைவிழந்துபோகும் நிலை ஏற்பட்டாலும் என்னுடைய கணவரோ அல்லது பிள்ளைகளோ உறவினர்களோ என்னைக் காப்பாற்றவோ தூக்கிச்செல்லவோ அனுமதிக்கக்கூடாது" என மரண சாசனம் எழுதி அன்னையர் முன்னணியிடம் ஒப்படைத்துவிட்டுச் சாவை நோக்கி பயணத்தை அன்னை பூபதித் தாய் தொடங்கினார்.

"அன்னையர் முன்னணியின் ஆவேச நெருப்பை அணைத்துவிட்டோம். மக்களின் எழுச்சியை மழுங்கடித்துவிட்டோம்" எனக்கொக்கரித்த இந்திய இராணுவத்தின் ஆணவத்திற்கு அன்னை பூபதி மீண்டும் போராட்டத்தை தொடங்கி முகத்திலறைந்தார்.

18/03/1988 அன்று அன்னை பூபதி இருகரங்களையும் கூப்பியபடி மாமாங்கவீதியை வலம்வந்தபோது அலைகடலென மக்கள் திரண்டு இந்தியப்படைக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

அன்னை பூபதி மூட்டிய தீ தமிழீழமெங்கும் பற்றியெரியத் தொடங்கியது.

-இந்தியப்படையே திரும்பிப்போ
-அன்னை பூபதியைச் சாகடிக்காதே.
-புலிகளுடன் பேசு.
-தமிழீழத்தைச் சுடுகாடாக்காதே.

என்ற முழக்கங்களை வான் அதிர முழங்கிய வண்ணம் மாணவ, மாணவியர்கள் கொளுத்தும் வெயிலையும் கொளுத்தும் சாலையையும் பொருட்படுத்தாது அலையலையாக அன்னை பூபதியைப் பார்க்க வந்துகொண்டிருந்தனர்.

அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி தமிழீழமெங்கும் போராட்டங்கள் வெடித்தன.

உண்ணாநோன்புப் பந்தலில் ஆயிரக்கணக்கான பெண்கள் கூடியிருந்து சர்வமத பக்திப்பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். அன்னை பூபதி மயங்கிய நிலையில் கிடந்தார். காண்போரின் உள்ளங்கள் உருகின.

இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் ஓட்டமும் நடையுமாக உண்ணாநோன்புப் பந்தலுக்கு வந்தார். அங்கிருந்த முக்கியமானவர்களிடம் இரகசியமாக "மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அன்னை பூபதி அம்மாவைத் தூக்கிப்போவதற்கு திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது" என்று கூறினார்.

இதன்மூலம் கூடியிருக்கும் கூட்டத்தினிடையே குழப்பத்தையும் பீதியையும் பரப்பத் திட்டமிட்டே இவ்வாறு கூறினார் என்பதைப் புரிந்துகொண்ட தாய்மார் அன்னை பூபதியைச் சுற்றி வியூகம் அமைத்தார்கள்.

"எங்கள் பிணத்தின்மீது ஏறிக்கடந்துதான் பூபதியைத் தொடமுடியும்" என முழங்கினார்கள்.

திடீரென தொலைவில் துப்பாக்கி வெடிக்கும் ஒலி கேட்கிறது. உடனே கூட்டத்தைச் சுற்றிலும் நிற்கும் இராணுவம் வானை நோக்கிச் சுட்டது. மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி கலைந்தோடச் செய்யவே இவ்வாறு செய்கிறார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொண்டனர்.

"உன் துப்பாக்கி மிரட்டல்களுக்கெல்லாம் இந்தப்பூபதி அசையமாட்டாள்" என்கிறார் அன்னை பூபதி.

களைத்துப்போன அந்த முகத்தில் உறுதியும் தீரமும் பளிச்சிடுகின்றன.

உடல் களைத்ததே தவிர உள்ளம் களைக்கவில்லை.

உலகப் பத்திரிகையாளர்கள் மட்டக்களப்பில் குவிகிறார்கள். அன்னை பூபதியின் உண்ணாவிரதம் மக்களிடையே ஏற்படுத்தியிருக்கும் எழுச்சியை நேரில் கண்டு உலகமெங்கும் செய்தியைப் பரப்புகிறார்கள்.

அன்னை பூபதியைச் சோதித்த மருத்துவர்கள் அவர் அபாய கட்டத்தை அடைந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். மக்கள் பரபரப்பையும் துயரத்தையும் அடைகிறார்கள்.

ஆனால், ஆணவம்கொண்ட இந்திய அதிகாரிகளோ மேலும் மேலும் அடக்குமுறைகளில் ஈடுபடுகிறார்கள்.

இப்போராட்டத்தை தூண்டிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வணபிதா சந்திரா பெர்னாண்டோ ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்த கிங்ஸ்லி இராசநாயகம், பூபதி அன்னையின் பிள்ளைகள் எனப் பலர் கைதுசெய்யப்படுகிறார்கள்.

அன்னையின் கணவர் கணபதிப்பிள்ளையை இந்திய இராணுவ அதிகாரிகள் அழைத்துச்சென்று நயமாகவும் பயமாகவும் திரட்டினார்கள். ஆனால், அவரோ "தமிழ் மக்களுக்கு நியாயம் தேடித்தான் என் மனைவி தன் உயிரைத் தியாகம் செய்ய உறுதிபூண்டிருக்கிறாள்" எனக்கூறுகிறார்.

அதிகாரிகளின் அத்தனை முயற்சிகளும் வீணாகின்றன. வெறிகொண்ட வேட்டை நாய்களைப் போன்று இந்திய இராணுவம் மட்டக்களப்பு வீதிகளில் அலைகிறது. 19/03/1988 அன்று தனது தியாகப் பயணத்தை தொடங்கிய அன்னை பூபதி சரியாக 31ஆம் நாள் தனது உயிரை 19/04/1988 அன்று தியாகம்செய்து சாவைத் தழுவிக்கொள்கிறார்.

அன்று இரவோடு இரவாக எல்லா ஏற்பாடுகளும் நடந்து அன்னை பூபதியின் உடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைக்கப்படுகின்றது. ஊர்வலம் புறப்பட்டுவிட்ட செய்தி கணநேரத்தில் பரவி மக்கள் வெள்ளம்போலத் திரளுகிறார்கள்.

நாவலடிக்கடற்கரை இதுவரை காணாத காட்சியைக்கண்டது. ஒருபுறம் அலைகடல். மறுபுறம் மக்கள் கடல். இடையே அன்னை பூபதியின் திருவுடல்.

அன்னை பூபதி உயிரோடு இருக்கும்போதும் அவரின் உறுதியைக் குலைக்க இந்திய - சிங்களக் கூட்டு இராணுவத்தால் முடியவில்லை. அவர் இறந்த பிறகும் அவர் உடல் அருகேகூட நெருங்க முடியவில்லை.

அன்னை பூபதியின் தீரமும் ஒப்பற்ற தியாகமும் தமிழீழப் பெண்களுக்கு என்றென்றும் வழிகாட்டிக்கொண்டே இருக்கும். தமிழீழப் பெண்களின் எழுச்சி வடிவமாகவும் தமிழர் வரலாற்றில் ஒரு கலங்கரை விளக்கமாகவும் அன்னை பூபதித்தாய் என்றும் திகழ்வார் என்பது உண்மை.

இன்று 19/04/2023 அன்னாரின் 35ஆவது நினைவு வணக்கமானது உலகத்தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் இடம்பெறுகிறது. அவர் வாழ்ந்த மட்டக்களப்பு மண்ணிலும் அவர் உண்ணாவிரதம் இருந்த மாமாங்கப்பிள்ளையார் கோயிலிலும் விசேட பூஜைகள், திதி ஆராதனைகள் என்பன இடம்பெற்று அவரின் கல்லறை அமைக்கப்பட்ட நாவலடி பூங்காவில் நினைவு வணக்கம் மற்றும் பேருரைகள் இடம்பெறவுள்ளன.

அன்னை பூபதி உயிர்நீத்து 35 வருடங்கள் கடந்த போதிலும், பாரத நாட்டுப்படைகளுக்கு எதிராக அவர் அகிம்சைப் போர் தொடுத்தும், பாரத நாட்டினால் செய்யப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம், அதனூடாக வந்த 13ஆவது சட்டம், மாகாணசபை தேர்தல் எல்லாம் கிடப்பில் கிடக்கும் நிலையே உள்ளது என்ற உண்மையை அன்னை பூபதியின் 35ஆவது நினைவில் உணர்ந்து கொள்வோம்.

"மட்டக்களப்பு மண் ஈன்ற மகத்தான தாய்.. மறத்தமிழர் குலத்தின் சரித்திர நாயகி.. மாற்றான் படைகளுக்கு அஞ்சாத தேவி.. மானத்தமிழ் அன்னை பூபதியின் தியாகம்.. மண் உள்ளவரை மனதை விட்டு அகலாது.."

**பா.அரியநேத்திரன்**

## நக்கல் நமசிவாயம்

***ராஜித்தவுக்கு அமைச்சு கொடுத்தால் ரோஹித்த அபேகுணவர்தனவுக்கும் ஒண்டு வேணுமெண்டு பொதுஜன பெரமுன ரணிலிட்ட கேட்டிருக்குதாம்... ரோஹித்தவுக்கும் கொடுத்தால் எனக்கும் வேணுமெண்டு யாரும் வரமாட்டாங்களோ..?***



# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 2023.04.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போது காணப்படுகின்ற விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்தல்**

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தில் 2003.08.24 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், குறித்த ஒப்பந்தத்தை திருத்தம் செய்வதற்காக 2016.12.06 அன்று பஹாமாஸ் நாட்டில் நாசாபூகில் இடம்பெற்ற சிவில் விமான சேவைகள் மாநாட்டில் இரு தரப்பினர்களுக்கிடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, அதற்கமைவான விதிமுறை ஒப்பந்தத்தில் (Protocol) கையொப்பமிடுவதற்காக 2021.01.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், இதுவரை ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்படவில்லை. குறித்த விதிமுறை ஒப்பந்த வரைவுக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் மற்றும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடு கிடைத்துள்ளது. அதற்கமைய, இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போது கையொப்பமிடப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்வதற்கான விதிமுறை ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், இலங்கை அரசு சார்பாக குறித்த விதிமுறை ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவருக்கு அதிகாரம் வழங்குவதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. பொதுமக்கள் சுதந்திரமாக பொழுதைக் கழிப்பதற்காக காலிமுகத்திடலை ஒதுக்குதல்**

சமூகப் பொறுப்பு நிதி (CSR) கருத்திட்டமாக காலிமுகத்திடலை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளதுடன், இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குறித்த அதிகாரசபை 220 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. கடந்த போராட்டக் காலங்களில் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்களைப் புதுப்பிப்பதற்காக மாத்திரம் 6.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் சுதந்திரமாக பொழுதைக் கழிப்பதற்கு இயலுமாகும் வகையில் இத்திடலைப் பயன்படுத்த வேண்டியிருப்பினும், இசை நிகழ்ச்சிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடும் வேறு பல செயற்பாடுகளால் இத்திடல் தொடர்ந்து சேதமடைவதுடன், இச்சுற்றுச்சூழலின் அழகையும், எழில் மிகுந்த தோற்றத்தையும் பேணிச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால், 2023.04.20ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த, காலிமுகத்திடலின் எழில் மிகுந்த தோற்றத்திற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் அல்லது பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக காலிமுகத்திடலைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்காதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**03. தேசிய மரநடுகை வேலைத்திட்டம் - "நாட்டின் மூச்சுக்கான சுபநேரம்"**

2020ஆம் ஆண்டில் தேசிய மரநடுகை வேலைத்திட்டத்திற்கு இணையாக தமிழ் - சிங்களப் புத்தாண்டு சுபநேரப் பத்திரத்தில் மரநடுகைக்கான தேசிய சுபநேரமும் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய, "சுபநேரத்தில் ஒரு மரம் - நாட்டின் மூச்சுக்கான சுபநேரம்" எனும் மரநடுகை வேலைத்திட்டம், குறித்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் 11 இலட்சம் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. இவ்வருட தமிழ் - சிங்களப் புத்தாண்டு சுபநேரப் பத்திரத்திற்கமைய, 2023.04.20ஆம் திகதி முற்பகல் 6.38இற்கு மரநடுகைக்கான சுபநேரம் அமைவதுடன், குறித்த சுபநேரத்தை அடிப்படையாகக்கொண்டு மரநடுகை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய, இவ்வருடத்தில் பயன்தரு பல பருவப் பயிர்களை நடுகை செய்வதற்கும், எமது நாட்டில் 52 இலட்சம் மொத்தக் குடும்பங்களையும் பங்கேற்புச் செய்வதற்காகவும் விவசாய அமைச்சு மேற்கொண்டுள்ள படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவைக்குத் தெளிவூட்டப்பட்டது. குறித்த வேலைத்திட்டத்திற்கு உடன்பாடு தெரிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**04. இலங்கையில் மாலைதீவு கலாசார நிலையமொன்றை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளல்**

கலாசார மற்றும் கலை விவகாரங்கள் தொடர்பான பயிற்சி வாய்ப்புகளை வழங்கல், விளையாட்டுகளுக்கான வசதியளித்தல், கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், மாநாடுகள், பொதுக் கருத்தரங்குகள், திரைப்படங்கள் மற்றும் ஏனைய கட்புல, செவிப்புல தயாரிப்புகளின் வெளியீடுகள் போன்ற செயற்பாடுகளுக்காக இலங்கையில் மாலைதீவுக் குடியரசின் கலாசார நிலையமொன்றை தாபிப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இரு தரப்பினருக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. அபிவிருத்தி லொத்தர் சபையின் சீட்டிழுப்புகளுக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டுகளை அச்சிடுவதற்கான பெறுகைக் கோரல்**

2023 மே மாதம் தொடக்கம் ஒரு வருட காலப்பகுதிக்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் கணினிமுறை சீட்டிழுப்புகளுக்கான லக்கின அதிர்ஷ்டம், அத கோடிபதி, சனிதா, சுப்பர் போல், அபிவிருத்தி அதிர்ஷ்டம், ஜயோதா, கப்ருக மற்றும் சசிரி போன்ற அதிர்ஷ்டலாபச் சீட்டுகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகைக் கோரலுக்கு ஒவ்வொரு அதிர்ஷ்டலாபச் சீட்டின் அடிப்படையில் தேசிய போட்டிவிலை மனுக் கோரல் முறைமையைப் பின்பற்றி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழு மற்றும் மேன்முறையீட்டு சபையின் பரிந்துரைகளுக்கமைய கீழ்க்காணும் வகையில் குறித்த அதிர்ஷ்டலாபச் சீட்டுகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகைகளை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

லக்கின அதிர்ஷ்டம், அத கோடிபதி, சுப்பர் போல், மற்றும் கப்ருக அதிர்ஷ்டலாபச் சீட்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகையை Grand Export (Pvt) Ltd இற்கு வழங்குதல்

சனிதா, ஜயோதா, அபிவிருத்தி அதிர்ஷ்டம் மற்றும் சசிரி அதிர்ஷ்ட லாபச் சீட்டுகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகையை Printcare Secure Ltd இற்கு வழங்குதல்

**06. 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2007ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு மற்றும் 5ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்காணும் கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2023.03.24ஆம் திகதிய 2324/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1979 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14ஆவது உறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்டுள்ள 2023.03.28ஆம் திகதிய 2325/06ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. கண்டிய சட்ட பிரகடனம் மற்றும் திருத்தக் கட்டளைச்சட்டத்திற்கான (**Kandyan law declaration and amendment ordinance) **திருத்தத்தை அறிமுகப்படுத்தல்**

கண்டிய சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் திருமணங்களின்போது விதவைகளுக்கு ஏற்படும் தீமை பயக்கும் நிலைமைகளை நிவர்த்திசெய்வதற்கு இயலுமாகும் வகையில் பொதுவான சட்டத்தின்கீழ் விதவையொருவருக்கு உரித்தாகும் உரிமைகள் கண்டிய சட்டத்தின்கீழ் திருமணமாகிய விதவைகளுக்கும் உரித்தாகும் வகையில் ஏற்பாடுகளை வகுத்துத் தருமாறு கண்டிய சமூகத்தவர்கள் நீண்டகாலமாகக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அதற்கமைய, கண்டிய சட்டப் பிரகடனம் மற்றும் திருத்தக் கட்டளைச்சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக திருத்தத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 1976ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை கட்டடக் கலையியலாளர் கல்வி நிறுவக சட்டத்திருத்தம்**

இலங்கையில் கட்டடக்கலை தொழில், அதன் நடைமுறைகள் மற்றும் கட்டடக் கலையியல் கலைக் கல்வி தொடர்பாக 1976ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள கட்டடக் கலையியலாளர் கல்வி நிறுவகம் செயலாற்றி வருகின்றது. கட்டடக் கலையியல் தொழிலின் சமகாலத் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் இலங்கை கட்டடக் கலையியலாளர் கல்வி நிறுவகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள், உறுப்புரிமை மற்றும் உரிமப் பயன்பாடு போன்றவற்றுக்குரிய சட்டப்பிரிவுகளைத் திருத்தம் செய்யவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, அதுதொடர்பான விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக குறித்த தொழில்வாண்மை நிறுவனங்களின் பிரதிகளுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக 1976ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை கட்டடக் கலையியலாளர் கல்வி நிறுவக சட்டத்தின் குறித்த பிரிவுகளை திருத்தம் செய்வதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி செயற்பாடுகளுக்கான பாராளுமன்ற அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்**

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையால் 2023.03.22ஆம் திகதி 48 மாத காலத்திற்கான விசேட மீட்பு உரிமைகள் (SDR) 2.29 பில்லியன் அமெரிக்க டொலர்கள், (அண்ணளவாக 03 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) பெறுமதியுடன் கூடிய நீடிக்கப்பட்ட கடன்வசதி இலங்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அதற்கான வாக்குறுதிப் பத்திரத்தை வெளியிட்டுள்ளது. குறித்த நிதி வசதிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் 2023.03.22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கடன்வசதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை உறுதிசெய்துகொள்வதற்கும், குறித்த கடன் வசதிக்குரிய ஏற்புடைய பிரதான கொள்கை வகுப்புகளில் உட்சேர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி செயற்பாடுகளுக்காக பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 2002ஆம் ஆண்டின 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நலன்புரி நன்மைகளைச் செலுத்துவதற்கான உத்தேசத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தல்**

2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல் தொடர்பாக குறித்த காலப்பகுதி உத்தேசத் திட்டத்தின்கீழ் நன்மைகளைப் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை, நடைமுறைப்படுத்தலை ஆரம்பிக்கும் தினம், உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக செலவாகும் தொகை போன்ற விடயங்களைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், வர்த்தமானி பத்திரத்தில் வெளியிட்டு குறித்த நலன்புரிக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்கமைய, நடைமுறைப்படுத்த வேண்டிய உத்தேசத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்காக விடயம்சார் நிபுணர்களுடன் கூடிய தொழில்நுட்பக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு, வறுமை இடைவெளியின் அடிப்படையில், நிலைமாற்றுநிலை, இடர்நேர்வுகளுக்குள்ளாகிய வறுமை மற்றும் தீவிர வறுமைக்குட்பட்ட சமூகக் குழுக்களுக்கு நலன்புரி நன்மைகள் உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது நலன்புரி நன்மைகளைப் பெற்றுவருகின்ற இயலாமையுடன் கூடிய நபர்கள், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கான வேறானதொரு நலன்புரி நன்மைகள் உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச நலன்புரி நன்மைகள் திட்டத்தை 2023.07.01 தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றதுடன், அதற்காக செலவிடப்படும் மொத்தத் தொகை ஆண்டொன்றுக்கு 206 மில்லியன் ரூபா எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு செலுத்தல் முறைமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

உற்பத்திக் கைத்தொழில் ஊக்குவிப்பு, சர்வதேச வணிகங்களை மேற்கொள்வதில் நிலவுகின்ற தடைகளை அகற்றல் மற்றும் விவசாயத்துறை உள்ளிட்ட உள்ளூர் தொழிற்றுறைகள் மற்றும் கருத்திட்டங்களுக்குத் தேவையான ஊக்குவிப்புகள் மற்றும் வசதியளித்தல்களுக்காக துறைமுக விமான நிலைய அபிவிருத்திக்கான வரி மற்றும் வியாபாரப் பண்டங்கள் ஏற்றுமதி சலுகைகள் உத்தேச முறையின் கீழான வரி (செஸ் வரி) போன்ற தீர்வை வரிகளற்ற, ஏற்றுமதி அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள வரியை படிப்படியாக நீக்குவதற்காக ஜனாதிபதியால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அரச வருமானத்தின் மீது ஏற்படுகின்ற தாக்கங்களை சமநிலைப்படுத்துவதற்காக சுங்க இறக்குமதி வரி மூலம் நிவர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வேலைத்திட்டம் உலக வங்கியின் அபிவிருத்திக் கொள்கைளுக்கான நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக நிறைவேற்ற வேண்டிய முற்கூட்டிய நடவடிக்கையாக கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, முதற்படி முறையாக அரசுக்கு குறைந்தளவு வருமான இழப்பு எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தீர்வை வரி பொருள் வகைகள் 1,631இற்கான துறைமுக விமானநிலைய அபிவிருத்தி வரியிலிருந்து விடுவிப்பதற்காக 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின்கீழ் கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.04.17
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5089 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,379,626.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 0 0 5 9 1 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3331 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,761,798.64
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 37 38 43 44

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1544 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,256,084.00
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 3 9 1 6 6 7

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1119 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,459,772.80
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 04 17 33 50

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 398 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,731,600.76
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 24 25 37 58 — விசேட இலக்கினம் மகரம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1437 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 314,959,382.00
ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 28 32 76 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

### கொத்மலையில் மீன்கள் உயிரிழக்கும் விவகாரம்

# சுகாதார அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பம்

(ஆ.ரமேஸ், எஸ்.கணேசன்)

தலவாக்கலை மேல்கொத்மலை நீர் மின் நிலையத்திற்கு நீரேந்தி செல்லும் அக்கரப் பத்தனை தொடக்கம் தலவாக்கலை வரையிலான ஆக்ரோவா ஓயா ஆற்று நீரில் உயிர் வாழும் மீன்கள் திடீரென செத்து மிதந்த விவகாரம் தொடர்பில் லிந்துலை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆக்ரோவா ஓயா ஆற்றில் வாழும் ஏராளமான மீன்கள் நேற்றுமுன்தினம் (17) அதிகாலைமுதல் ஆற்றில் செத்து மிதந்து கரையொதுங்குவதாகவும், இதற்கான காரணத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதையடுத்து நடவடிக்கையில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அன்றையதினம் காலைமுதல் ஆக்ரோவா ஓயா ஆற்றில் நீர் கறுப்பு நிறமாகவும், நுரை பொங்கியும் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது. இதைத் தொடர்ந்து திடீரென ஆற்றில் உயிர் வாழும் மீன்கள் மயங்கியும், உயிரிழந்தும் மிதந்து கரையொதுங்கியதாக நேரில் கண்ட பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில் இவ்வாறு கரை ஒதுங்கிய மீன்களை பிரதேச மக்கள் மீட்டுள்ளதுடன், சிலர் இம் மீன்களை சமையலுக்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த விடயம் குறித்து பிரதேச மக்கள் லிந்துலை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி துரைராஜா ரெஸ்மியின் கவனத்திற்கும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் புஸ்பகுமாரவின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளனர்.

இதையடுத்து களத்திற்கு விஜயத்தை



மேற்கொண்ட சுகாதார அதிகாரிகள் ஆற்றில் இறந்து மிதந்த மீன்களையும், ஆற்றுநீரில் மாதிரிகளில் பெற்று பேராதனையிலுள்ள நீர் மாதிரி பரிசோதனை ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை, அக்கரப்பத்தனை ஹோல்புரூக் பகுதியில் இயங்கும் தேயிலை தொழிற்சாலையிலிருந்து வெளியான கழிவு, ஆற்றுநீரில் கலக்கப்பட்டு ஆற்றுநீர் மாசடைந்து மீன்கள் இறந்திருக்கக்கூடும் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆக்ரோவா ஓயா ஆற்றில் ஓடும் நீரை அக்கரகந்த தொடக்கம் தலவாக்கலை வரை ஆற்று ஓரத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பாவனைக்கு எடுத்துக்கொள்வதாகவும், ஆற்றுநீர் மாசடைந்த நிலையில் விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் பாதிப்புகள் ஏதும் ஏற்படுமா என்ற அச்சமும் நிலவுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது குறித்து சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் மற்றும் சுற்றாடல் பிரிவினர் தலையிட்டு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாழ்வாதார நிவாரணங்களை வழங்குக!

### மாவட்ட செயலாளர்களுக்கு இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் வலியுறுத்து

(பதுளை செய்தியாளர்)

நாட்டில் குறைந்த வருமானம் ஈட்டுவோரின் பட்டியலுக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளீர்த்து அவர்களுக்கும் அரச வாழ்வாதார நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருந்தோட்டங்கள் அடங்கிய பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்ட செயலாளர்களை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் எழுத்துமூலம் வலியுறுத்தியுள்ளார்.



மாவட்ட செயலாளர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிவாரணம், சமுர்த்தி நிவாரணம், நோயாளர்களுக்கான நிவாரணம், குறை வருமானம் பெறுவோருக்கான நிவாரணம் மற்றும் ஏனையோருக்கான நிவாரணம் என பல்வேறு தரப்பினருக்கு அரச நிவாரணங்கள் வழங்கப்பட்டுவரும் அதேவேளை, இந்நாட்டில் மிகக் குறைந்தளவிலான வருமானத்தை ஈட்டி வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான அரச நிவாரணங்களும் வழங்கப்படுவதில்லை என்பதை தங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். எமது மக்கள் மீது பகிரங்கமாகவே பாரபட்சம் காட்டப்படுவது அப்பட்டமான மனித உரிமை மீறல் செயற்பாடாகும்.

மேற்படி நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள தகுதிவாய்ந்தவர்கள் கிராமப்புறங்களில் மாத்திரமே என்ற நிலைப்பாடு தவறானது. இந்நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள அதிக தகுதிகளைக்கொண்டவர்கள் இப்பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்வோரே. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு அரச நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோருக்கு முறையான அறிவித்தல்களை வழங்குமாறு தயவாக கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# விபத்தில் மூதாட்டி உயிரிழப்பு

(எஸ்.கணேசன்)


புசல்லாவ, இரட்டைப்பாதை பகுதியில் கண்டி - நுவரெலியா பிரதான வீதியில் வாகனம் மோதியதில் மூதாட்டி ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இவ்விபத்து நேற்று (18) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவிலிருந்து கண்டியை நோக்கி பயணித்த வாகனமொன்று இவரை மோதிவிட்டு, தப்பிச்சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதிக இரத்தபோக்கு ஏற்பட்டதால் குறித்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் புஸ்ஸலாவ பொலிஸார், கம்பளை பொலிஸ் கைரேகை அடையாளப் பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.



மத்திய மாகாண முஸ்லிம் கல்விப் பேரவையின் விசேட இப்தார் நிகழ்வு அக்குறனை ஐடெக் கல்வி நிலையத்தில் அதன் செயலாளர் ஐ. ஜனூதீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குறனை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி சியாம் கலந்துகொண்டார். இதன்போது இவ்வமைப்பின் தலைவரும் மத்திய மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளரும் கவிஞருமான எம்.வை.எம். முஸ்லிமினது மரணம் குறித்து துஆப் பிரார்த்தனையை வத்தேகம கல்வி வலயப் பணிப்பாளர் ஹாசிம் நிகழ்த்தினார்.

(படப்பிடிப்பு: இக்பால் அலி)

# ஹட்டன் டிப்போவுக்கு ரூ.150 இலட்சம் வருமானம்

(மனூர சுதத் செல்லஹேவா)

தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தில் பஸ் சேவை மூலம் ஹட்டன் டிப்போவுக்கு 150 இலட்ச ரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் பொறுப்பதிகாரி டபிள்யு. ஜீ.ஜே.கே. கீர்த்திரத்ன தெரிவித்தார்.

ஹட்டன்- கொழும்பு உள்ளிட்ட ஏனைய இடங்களுக்கு மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியதன் மூலம இந்த வருமானம் கிடைக்கப்பெற்றதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதம் 12, 13, 16, 17 ஆகிய திகதிகளிலேயே அதிக வருமானம் ஹட்டன் டிப்போவுக்குக் கிடைத்துள்ளது. குறிப்பாக ஹட்டன் - கொழும்பு பஸ் சேவையூடாகவே கூடுதலான வருமானம் கிடைக்கப்பெற்றதாக கீர்த்திரத்ன சுட்டிக்காட்டினார்.

# முல்லைத்தீவு கடலில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்துக!

### வட்டுவாகல் கடற்படை முகாமை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டம்

முல்லைத்தீவு கடலில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சுருக்குவலை மற்றும் ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக் கோரி வட்டுவாகல் பாலத்திலிருந்து கோட்டாபய கடற்படை முகாம் வரை சென்ற மீனவர்கள் அங்கு கடற்படை முகாமை முற்றுகையிட்டு தங்கள் கவனயீர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழில் அமைப்புகள் ஏற்பாடு










செய்த இந்த கவனயீர்ப்புப் போராட்ட நடவடிக்கையின்போது,

முல்லைத்தீவு கடலை நம்பி 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நிலையில் சாலை தொடக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் சுருக்குவலை ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதனால் மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், சிறுமீன் இனங்கள் அழிக்கப்படுகின்றன.

மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையை இலங்கை கடற்படையினர் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கடற்றொழில் அமைச்சர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய காவலரண்களை அமைத்து கட்டுப்படுத்தித் தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதிக்கும் கோட்டாபய கடற்படை முகாம் தளபதிக்கும் மீனவர்கள் மனு கையளித்துள்ளதுடன், கடற்றொழில் அமைச்சருக்கும் விடயத்தை தெரியப்படுத்தி நேற்று இரவு முடிவு சொல்லப்படும் என அறிவித்துள்ளதைத் தொடர்ந்து மீனவர்கள் கலைந்து சென்றுள்ளார்கள்.

# கிராஞ்சியில் மட்டுப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகம்; நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரிக்கை

(மு.தமிழ்ச்செல்வன்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிராஞ்சி குடிநீர் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுகின்ற குழாய் வழி குடிநீரானது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பமான நிலைமை காரணமாக நீர்மூலத்திலிருந்து

தொடர்ச்சியாக நீரைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளமையால் கிராஞ்சி குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் குழாய் வழி நீர்

விநியோகிப்படுகின்ற கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிநீர் விநியோக்கப்படும் எனவும், பொது

மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர்.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அதிபராக பதவியேற்கவுள்ளார் அருட்சகோதரர் ரெஜினோல்ட்

(மன்னார் நகர் நிருபர்)

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அதிபராக கடந்த 7 வருடங்களுக்கும் மேலாக சிறப்பாகக் கடமையாற்றிய அருட்சகோதரர் ரெஜினோல்ட் கல்முனை புனித கார்மேல் பற்றிமா கல்லூரி அதிபராக இடமாற்றம் பெற்று நாளை (20) பதவி ஏற்கவுள்ளார்

கடந்த 2016ஆம் ஆண்டு மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்ட அருட்சகோதரர் ரெஜினோல்ட் இதற்கு முன்னர் நானாட்டான் டிலாசால் கல்லூரி, அடம்பன் கல்லூரி போன்ற பாடசாலைகளில் அதிபராக பணியாற்றியிருந்தார்

இவருடைய காலப்பகுதியில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை கல்வி, விளையாட்டு, இணைப்பாட விதான செயற்பாடுகள் என மாவட்ட ரீதியாக பிரகாசித்ததுடன், கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர்



அத்துடன், புலம்பெயர் நாடுகளிலுள்ள பழைய மாணவர்களை அந்த அந்த நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை நிறுவுவதற்கான வழிகாட்டல்களை வழங்கியதுடன், மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 150 வருட பூர்த்தி ஜுபிலியை முன்னிட்டு பழைய மாணவர்கள் ஊடாக 5 திறன் வகுப்பறைகளை நிறுவியதுடன், 150 ஆண்டு நினைவு முத்திரை, சவேரியன் வேக் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி அதனூடாக பாடசலையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், நாளை கல்முனை புனித கார்மேல் பற்றிமா பாடசாலை அதிபராக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதுடன், கல்முனை பற்றிமா பாடசாலை அதிபராக கடமையாற்றிய அருட்சகோதரர் சந்தியோகு மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபராக கடமைகளைப் பெறுப்பேற்கவுள்ளார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 12 பேர் யாழ். மாமுனை – சுண்டிக்குளம் பகுதிகளில் கைது

யாழ்ப்பாணம் மாமுனை மற்றும் சுண்டிக்குளம் கடற்பரப்புகளில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியான சுற்றிவளைப்பில் சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்ட 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளின்போது, இந்த சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்தப்பட்ட 03 டிங்கி படகுகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத மீன்பிடி உபகரணங்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்படைத் தளத்திற்குச் சொந்தமான மாமுனை கடற்படைப் பிரிவினர் மாமுனைக்கு அப்பால் விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கையின் மூலம் மீன்பிடிப்பதற்காக சட்டவிரோத டைவிங் நடவடிக்கையில் ஈடுபட்ட 04 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 01 டிங்கி படகு மற்றும் அனுமதியற்ற மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, வெற்றிலைக்கேணி கடற்படையின் கடற்படைப் பிரிவின் சுண்டிக்குளத்துடன் இணைக்கப்பட்ட கடற்படையினர் குழுவொன்றும் விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டது. இதன்போது, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 08 பேரை 02 டிங்கி படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களுடன் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 28 முதல் 59 வயதுக்குட்பட்ட மன்னார், தாளையடி, பிள்ளையார் கோயிலடி, புதுக்குடியிருப்பு மற்றும் ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள். சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# தல்தென சீர்திருத்த நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற ஒன்பது பேரும் கைது




(எஸ்.கணேசன்)

சிறைச்சாலைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான பதுளை மாவட்டத்தின் தல்தென இளைஞர் சீர்திருத்த நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற ஒன்பது பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தல்தென சீர்திருத்த நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (17) காலை இந்த 9 கைதிகளும் தப்பி ஓடிவிட்டனர். நோன்பு நடவடிக்கைகளுக்காக தனி அறையில் தங்க வைக்கப்பட்டிருந்தபோது அந்த அறையிலிருந்த இரும்புக்கம்பியை அறுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்றமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதிகள் வழங்கிய தகவலின்படி, சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, தல்தென சிறைச்சாலையின் புதிய பண்ணைக்கு அருகில் நேற்று (18) காலை இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கந்தகெட்டிய பொலிஸார் கிராம மக்களின் உதவியுடன் மேற்கொண்ட தேடுதலின்போது கந்தகெட்டிய பதுலுஓயாவிற்கு அருகிலுள்ள வயல்வெளிக்கு அருகில் மேலும் நான்கு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் (17) மாலை 6.30 மணியளவில் கைது செய்யப்பட்டதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (18) அதிகாலை 4 மணியளவில் கந்தகெட்டிய கிரிவெஹெர பதுலுஓயாவிற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது எஞ்சிய மூன்று இளைஞர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக சிறைச்சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

23, 24, 25, 26 வயதுடைய இந்த இளைஞர்கள் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறைத்தண்டனை பெற்றவர்கள் என்றும் சீர்திருத்தத்தின் பின்னர் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் விடுவிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த சீர்திருத்த நிலையத்தில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின்கீழ் 376 இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த இளைஞர் சீர்திருத்த நிலையத்தில் 48 உத்தியோகத்தர்கள் மட்டுமே இங்கு கடமையாற்றுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# திருச்சியிலிருந்து இலங்கைக்கு இயக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை இரத்து

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

திருச்சியிலிருந்து இலங்கைக்கு இயக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி விமான நிலையத்திலிருந்து இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், ஓமன், டுபாய், அபுதாபி உள்ளிட்ட நாடுகளுக்கு அதிக அளவிலான விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த விமானங்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், எயார் இந்தியா எக்ஸ்பிரஸ், இண்டிகோ, மலிண்டோ, ஸ்கூட் விமான நிறுவனங்கள் இயக்கி வருகின்றன. இந்நிலையில், திருச்சியிலிருந்து இலங்கைக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மட்டும் பல ஆண்டு காலமாக இயக்கப்பட்டு வருகிறது. இதில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருச்சியிலிருந்து இலங்கைக்கு பிட்ஸ் எயார் நிறுவனம் தனது சேவையை ஆரம்பிப்பதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதன் இயக்கமானது இரத்துசெய்யப்பட்டது.

இதற்கு முன்னதாக திருச்சியிலிருந்து இலங்கைக்கு இண்டிகோ நிறுவனத்தின் சார்பில் விமானம் இயக்கப்பட்டது. இந்த விமான சேவையும் குறைந்த காலமே இயக்கப்பட்டு பின்னர் இரத்துசெய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக திருச்சியிலிருந்து இலங்கைக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் இரு சேவைகளை வழங்கி வந்தது.

அதில் குறிப்பாக, காலை மற்றும் மதிய நேரங்களிலென இரு சேவைகளும் இயக்கப்பட்டு வந்தன. இதில் திருச்சியிலிருந்து வளைகுடா நாடுகளுக்கு செல்லும் பயணிகள் இலங்கை வழியாக செல்வது வாடிக்கை. இந்தப் பயணிகள் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தை மட்டுமே நம்பியிருக்கும் நிலை இருந்துவந்தது. திருச்சிக்கு வரும் பயணிகள் அதிகளவில் இந்த விமான சேவையைப் பயன்படுத்தி வந்தனர். தென் தமிழகத்திலிருந்து வளைகுடா நாடுகளுக்கு பணி நிமித்தமாக செல்லும் பயணிகள் அதிகம் என்ற காரணத்தினால் அவர்கள் திருச்சி விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமான சேவைகளைப் பயன்படுத்தும் நிலை இருந்துவந்தது.

இவ்வாறு திருச்சி விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் விமான சேவைகள் வளைகுடா நாடுகளுக்கு இருந்தாலும் இலங்கை சென்று அங்கிருந்து வளைகுடா நாடுகளுக்குச் செல்வதற்கு கட்டணம் குறைவாக இருந்த காரணத்தினாலும் பயண நேரம் குறைவு என்பதாலும் இதனை அதிகம் பயன்படுத்தி வந்தனர். இதற்கிடையே கடந்த சில மாதங்களாக திருச்சி விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு இயக்கப்பட்டுவந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையானது வாரத்திற்கு இரண்டு நாட்கள் அதாவது, வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கடந்த 6ஆம் திகதிமுதல் இரத்துசெய்யப்பட்டுள்ளது.

மேலும் இரு சேவைகள் வழங்கிவந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் தற்போது ஒரு சேவை மட்டும் வழங்கி வருகிறது. இதனால் வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் பயணிகள் அதிக கட்டணம் செலுத்தி செல்லும் நிலை ஏற்படுகிறது. மேலும் விமான சேவை குறைக்கப்பட்டதால் பயணிகள் ஒரு விமான சேவையை மட்டுமே நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சீர்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மீண்டும் தனது இரண்டாவது சேவையை வழங்குவதுடன், இரத்துசெய்யப்பட்ட இரண்டு நாட்கள் விமான சேவைகளும் மீண்டும் வழங்கிட வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அத்துடன், திருச்சி விமான நிலையத்திலிருந்து புதிய விமான நிறுவனங்களின் சேவைகள் இலங்கைக்கு இயக்கப்பட்டால் இதுபோன்ற சிரமங்கள் பயணிகளுக்கு ஏற்படாது எனக் கூறப்படுகிறது.

# எஸ்.ரி.எவ். கான்ஸ்டபிள் ஹெரோயினுடன் கைது

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கான்ஸ்டபிள் ஒருவர் மாளிகாவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாளிகாவத்தை பொலிஸார் நேற்றுமுன்தினம் (17) இரவு குற்றத்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மாளிகாவத்தை சமாதி விகாரைக்கு அருகில் காத்திருந்த நபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது அவர் நெல்லியடி விசேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் எனத் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகாமிலிருந்து விடுமுறையில் வந்திருந்த வேளையில் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# முச்சக்கரவண்டி விபத்து: மூன்றரை வயதுச் சிறுவன் பலி!



கொடகம சந்தியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மூன்றரை வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த குழந்தையின் தாய், தந்தை மற்றும் சகோதரர் காயமடைந்த நிலையில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நுகேகொடையிலிருந்து மாதுலாவ பிரதேசத்தில் உள்ள தனது வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மீகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 23 வயது பெண் ஆங்கில ஆசிரியரை முத்தமிட்ட 61 வயது அதிபர் கைது!

தனியார் பாடசாலை ஒன்றின் ஆசிரியையை பலவந்தமாக முத்தமிட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படும் தனியார் பாடசாலையின் அதிபர் நேற்றுமுன்தினம் (17) பிற்பகல் கைதுசெய்யப்பட்டதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டுக்கு தன்னால் சரியான முறையில் வாழ்த்து தெரிவிக்க முடியாமல் போய்விட்டது எனக் கூறி அதிபர், ஆசிரியையை வலுக்கட்டாயமாக முத்தமிட்டதாகக் கூறப்படுகிறது. சந்தேக நபர் கடவத்தை பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

23 வயதுடைய ஆசிரியை செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேகத்திற்குரிய அதிபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட நாளில், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. அதிபர், பெண் ஆசிரியைக்கு போன் செய்து, சில அவசர வேலைகள் இருப்பதாகக் கூறி பாடசாலைக்கு வருமாறு கூறியதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# வென்னப்புவ பகுதி சிறுவர்கள் மூவர் புத்தாண்டு தினத்திலிருந்து மாயம்!

வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் புத்தாண்டு தினத்திலிருந்து காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 வயதுடைய இருவர் மற்றும் 14 வயதுடைய ஒருவருமே இவ்வாறு காணாமல்போயுள்ளனர். இவர்கள் அனைவரும் வென்னப்புவ தும்மலகெதர பிரதேசத்தில் வசிப்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல்போன இவர்களைக் கண்டுபிடிக்க வென்னப்புவ பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். முதற்கட்ட விசாரணையில் இவர்கள் மூவரும் ஒரே பாடசாலை மாணவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் கைத்தொலைபேசிகளை வைத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக தொழில் தேடிச் செல்லவுள்ளதாக ஏற்கனவே இந்தச் சிறுவர்கள் நண்பர்களிடம் தெரிவித்துள்ளமை தெரியவந்துள்ளதால் அது தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

# சிவசேத்திரம் நடனப்பள்ளியின் வருடாந்த நிகழ்ச்சி இலண்டனில்



சிவசேத்திரம் நடனப்பள்ளி நடத்தும் வருடாந்த நடன நிகழ்ச்சி இலண்டன் நகரில் எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 5 மணிமுதல் இரவு 7.30 மணிவரை நடைபெறவுள்ளது.

நடனப்பள்ளியின் பிரதம ஆசிரியையான திருமதி சசிகுமார் சிவாந்தினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அவரிடமிருந்து பயிற்சி பெற்ற மாணவிகள் தமது பரதநாட்டிய திறமையை வெளிப்படுத்தவுள்ளனர். திருமதி சிவாந்தினி இதற்கு முன்னரும் இத்தகைய பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திய அனுபவம்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இலங்கையில் பதியப்பட்ட வெளிநாட்டு முகவர்கள் சங்கம் (அல்பா) 300இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இணைந்து லோட்டஸ் டவர் 2 உணவக விடுதியில் இப்தார் நிகழ்வுகளை நடத்தினர். இந்நிகழ்வுக்கு அதிதிகளாக அமைச்சர்களான மனுச நாணயக்கார, அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.ஹரீஸ், ஏ.எச்.எம்.பௌசி, எஸ்.எம்.மரிக்கார், எஸ்.எம்.முசாரப் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளின் தூதுவர்களும் அதிகாரிகளும் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர். (அஷ்ரப் எ சமத்)

## நாணய மாற்று விதம் (18.04.2023)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 208.6174 | 221.6759 |
| கனேடியன் டொலர் | 231.9922 | 246.4468 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.6635 | 48.2617 |
| யூரோ | 340.6283 | 359.7534 |
| ஜப்பான் யென் | 2.3168 | 2.4455 |
| சிங்கப்பூர் டொலர் | 233.3274 | 246.9360 |
| ஸ்ரேலிங் பவுன் | 385.8713 | 406.9916 |
| சுவிஸ் பிராங்க் | 345.5936 | 367.8930 |
| ஐ.அ. டொலர் | 312.4139 | 327.4612 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848.5991 |
| குவைட் | குவைட் தினார் | 1,044.3497 |
| ஓமான் | ஓமான் றியால் | 830.9337 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.6450 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.2920 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.1187 |

# பேஸ்புக் காதலன் 15 வயதுச் சிறுமியை பாலியல் சித்திரவதை செய்த கொடூரம்

## கதிர்காமம் பொலிஸாரால் இளைஞர் கைது

தம்புள்ளை பிரதேசத்தில் வசிக்கும் 15 வயது பாடசாலை சிறுமி, முகநூல் மூலம் அறிமுகமான காதலனுடன் ஓடிச்சென்ற நிலையில், மிக மோசமான பாலியல் கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

கதிர்காமத்திலுள்ள காதலனின் வீட்டில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) பொலிஸாரால் சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியை கொடூரமாக பாலியல் துன்புறுத்தியதாகக் கூறப்படும் 27 வயதுடைய நபரும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்ட சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தம்புள்ளை பிரதேசத்திலுள்ள கனிஷ்ட கல்லூரி ஒன்றில் பத்தாம் தரத்தில் கல்வி கற்று வந்த இந்தச் சிறுமி, முகநூல் மூலம் இளைஞன் ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார். இருவரும் ஒருமுறை கூட சந்தித்திருக்காத நிலையில், காதலனுடன் சேர்ந்து வாழ விரும்பிய சிறுமி, தனது பெற்றோருக்குத் தெரிவிக்காமல் இரகசியமாக தப்பிச் சென்றுள்ளார்.

சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்ற பேஸ்புக் காதலன், சிறுமியுடன் உடலுறவு கொள்ள விரும்பினார். எனினும், சிறுமி அதற்கு உடன்படவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த பேஸ்புக் காதலன், சிறுமியைத் தாக்கி கொடூரமான பாலியல் வதை புரிந்துள்ளார். வெற்று பியர் போத்தலை சிறுமியின் பெண்ணுறுப்பில் நுழைத்து, கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாக அப்படியே வைத்திருந்துள்ளார்.

இது தவிர, சந்தேக நபர் சிறுமியின் கழுத்தை நெரித்துள்ளார். இதன்போது சிறுமியின் மூக்கிலிருந்து இரத்தம் வந்துள்ளது.

பொலிஸ் 119 அவசர அழைப்புப் பிரிவினரால் செய்யப்பட்ட அறிவித்தலின்பேரில் கதிர்காமம் பொலிஸ் குழு சிறுமி தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டிற்குச் சென்று சந்தேக நபரைக் கைதுசெய்து சிறுமியை பொலிஸ் காவலில் எடுத்தனர்.

சந்தேகநபரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது .

# மே மாதத்தில் முட்டை விலை குறையலாம்!

மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் தற்போதைய கட்டுப்பாட்டு விலையை விட குறைவான விலையில் முட்டையின் விலையை குறைக்க தயாராக இருப்பதாக முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த மாதம்முதல் விலையைக் குறைப்பதற்கு அதிகாரிகளின் தலையீடு தேவையில்லை என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் விவகார அதிகாரசபையானது தற்போது முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை விதித்துள்ளபோதிலும், விநியோகம் மற்றும் தேவைக்கேற்ப விலை நிர்ணயிக்கப்படுகிறது என்றார்.

நுகர்வோர் விவகார அதிகாரசபை ஏழுமுதல் எட்டு மாதங்களாக முட்டை உற்பத்தியாளர்களை குறிவைத்து வருகிறது, ஆனால், நடைமுறையில் விலையைக் குறைக்கத் தவறிவிட்டது என்றார்.

பண்டிகைக் காலங்களில் தேவை அதிகமாக காணப்படுவதாகவும் அதனால் முட்டையின் விலை அதிகரிப்பது இயல்பானது எனவும் சரத் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மே முதலாம் திகதிக்குப் பிறகு முட்டை விலை தற்போதைய கட்டுப்பாட்டு விலையை விட குறைவாக இருக்குமென்று நம்புகிறோம் - என்றார்.



# தமிழர்களை அடிமைப்படுத்தும் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்வது அன்னை பூபதிக்கு செய்யும் துரோகம்

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மண் பறிபோய்க்கொண்டிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் சிங்கள மயமாக்களும் பௌத்தமயமாக்களும் மிகத் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில், இந்திய அரசு சிங்களப் பேரினவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி தமிழர்களை அடிமைப்படுத்தும் விதத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென நிர்ப்பந்தம் செய்துவருகின்றது. அதை ஏற்றுக்கொள்வதென்பது அன்னைபூபதிக்கு செய்யும் துரோகம் - என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

அன்னை பூபதியின் 35ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஆரம்பமான ஊர்திப் பவனி திங்கட்கிழமை (17) மாலை 6.00 மணியளவில் திருகோணமலையை வந்தடைந்தது.

இதன்போது, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

35 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ மண்ணில் வந்திறங்கிய இந்தியப் படைகள் தமிழ் மக்களுக்கு எதிராக தங்களுடைய ஆயுதங்களை ஏந்தி அவர்கள் மீது பாரிய படுகொலைகளை கட்டவிழ்த்துக்கொண்டிருந்த நேரத்தில் வகை தொகையின்றி தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு - சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்துகொண்டிருந்த காலகட்டத்தில் அந்தக் கொடுமைகளுக்கு எதிராகவும் அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை மூலமாக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் மேலும் தமிழர்களுடைய நீண்டகால அரசியல் நோக்கம் தீர்க்கப்பட வேண்டும் என்றும் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி 1988ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி மட்டக்களப்பு மண்ணில் ஆரம்பித்திருந்தார்.

இவர் 31 நாட்கள் உணவு உண்ணாமல் பசியோடும் பட்டினியோடும் உண்ணாவிரதம் இருந்து ஈழ தேச பிள்ளைகளை காக்க வேண்டும் என்ற நோக்குடன் நீதி கோரியே மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

31ஆவது நாளில் அவர் துடிதுடித்து இறந்துகொண்டிருக்கின்றபோது இந்திய அரசு அவரை கண்டுகொள்ளவில்லை. அன்றைய தினம் அவருடைய உயிர் பிரிந்தது. இருந்தபோதிலும், இந்திய அரசு சிங்களப் பேரினவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி தமிழர்களை அடிமைப்படுத்தும் விதத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என நிர்ப்பந்தம் செய்து வருகின்றது. அதை ஏற்றுக்கொள்வதென்பது அன்னை பூபதிக்கு செய்யும் துரோகம் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற இப்தார் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு





(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அட்டாளைச்சேனை அல்-இபாதா மன்றத்தின் ஏற்பாட்டில் 12ஆவது வருடமாக நடைபெறும் வருடாந்த இப்தார் நிகழ்வும், பரிசளிப்பும் திங்கட்கிழமை (17) மாலை அட்டாளைச்சேனை பெரியபாலத்தடி முன்றலில் நடைபெற்றது.

அல்-இபாதா மன்றத்தின் போசகரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பையின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கடந்த 19 நாட்கள் நடைபெற்ற பயான் நிகழ்வுகளில் ஒவ்வொரு நாளும் கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடைகளை வழங்கியவர்களுக்கு சான்றிதழ்களுடன் பணப்பரிசும் வழங்கப்பட்டது. இப்தார் நிகழ்வின் பின் விசேட துஆப் பிரார்த்தனையை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.ஐ.எம்.அஷ்ரப் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், உலமாக்கள், உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகளால் துர்நாற்றம்

# உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படாமையை கண்டித்து புதுக்குடியிருப்பு மக்கள் ஆர்ப்பாட்டம்



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட புதுக் குடியிருப்பு அமலபுரம் 50 வீட்டுத்திட்ட பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகளை இப்பகுதியில் உள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் பிரதேச சபையின் கழிவகற்றல் தரப்பினரால் கொட்டப்படுவதால் பாரிய அசௌகரியங்களை தாம் எதிர்நோக்குவதாகவும், உரிய தரப்பினரிடம் தெரிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்காமையினை கண்டித்தும் அப்பகுதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் திங்கட்கிழமை (17) ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இப்பகுதியில் இறைச்சிகளுக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகளை குழிகளை வெட்டியும் சில கழிவுகளை வெளியிலும் போடுவதால் துர்நாற்றம் வீசுகின்றது. மேலும் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதோடு.தோல் நோய்கள், சுவாச நோய்கள் மற்றும் சுத்தமான குடிநீர் இன்மை போன்ற பல சிரமங்களை தாம் எதிர்நோக்குவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மழைக் காலங்களில் திண்மக் கழிவு பகுதியில் இருந்து வெள்ளநீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் பரவி வரும்போது அதனால் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதனால் எமது வீடுகளுக்கு உறவினர்கள் கூடவருவதில்லை.

மேலும், தங்களுக்கு இப்பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதில் எதுவித பிரச்சினைகளும் இல்லை. இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகளை இப்பகுதியில் போட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டனர்.

சுமார் 14 வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் குடியேறிய இவர்கள் இப்பகுதியில் சேதன உரம் தயாரிப்பதற்கான நிலையம் அமைக்கவுள்ளதாகவும் அதில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் உரிய திணைக்களத்தினால் வாக்குறுதியளிக்கப்பட்டு இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதுவரை அவ்வாறு எதுவித வேலைவாய்ப்பும் வழங்கப்படவில்லை.

பல தடவைகள் அரசியல்வாதிகள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸாருடன் இவ்விடயங்கள் தொடர்பில் தெரிவித்தும் இப்பகுதியில் இனிமேல் இவ்வாறு நடக்காதென உரிய அதிகாரிகள் தெரிவித்தாலும் கூட இதுவரை எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபை செயலாளரிடம் வினவியபோது, ஆரையம்பதி பிரதேச சபைக்குரிய திண்மக்கழிவு நிலையம் முறையாக செயல்பட்டு வருகின்றது. அங்கே குப்பை தரம் பிரித்து சேதன உரம் செய்துகொண்டிருக்கின்றோம். இருந்தும் சில பிரச்சினைகள் அங்கு ஏற்பட்ட காரணத்தினால் இப்போது அதை மெதுவாக சீர்செய்து வருகின்றோம். எதிர்காலத்தில் எதுவித சுகாதாரப் பிரச்சினைகளும் மக்களுக்கு ஏற்படாதவண்ணம் அதனை சீர்செய்வோம். அங்கு தற்போது மடுவத்தின் கழிவுகள் எதுவும் கொட்டப்படுவதில்லை. இந்தக் கழிவுகளை நிரந்தரமாக அப்பகுதியில் கொட்டாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம் - என அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஏற்பாட்டில் வருடாந்த இப்தார் நிகழ்வும், மார்க்கச் சொற்பொழிவும் வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையில் சனிக்கிழமை (15) இடம்பெற்றது.

வருடாந்த இப்தார் நிகழ்வும், மார்க்கச் சொற்பொழிவில் இலங்கைக்கான ஓமான் நாட்டின் முன்னாள் தூதுவர் ஓ.எல்.அமீர் அஜ்வத், கல்வியமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் பணிப்பாளர் என்.ரீ.நசிமுத்தீன், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹிட் எம்.ரிஸ்மி, பேரவையின் முன்னாள் தேசிய தலைவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் உலமாக்கள், நன்கொடையாளர்கள், வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர்கள், செயலாளர், பொருளாளர், மாவட்ட பணிப்பாளர்கள், பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள், வை.எம்.எம்.ஏ.கிளையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருது அல்-ஹிலாலில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு





(மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்)

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(16) மாலை பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் ஏ.எம்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) ரமழான் சிந்தனை வழங்கினார்.

பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துன் நஜீம் உட்பட பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.எல்.எம்.றிபாஸ், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் அஷ்-ஷெய்க். எம்.எம்.சலீம் (ஷர்க்கி), சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.எம்.முபாறக், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலீக், ஓய்வுநிலை மேலதிக வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.முக்தார், மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் ஏ.எம்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி), பொதுச் சேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினரும், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம், தென்கிழக்குப் பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர், பேராசிரியர் ஜௌபர், சட்டத்தரணி ரஸ்ஸாக், சி.எம்.டி.கெம்பஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எம்.ஜெமீல், றியோ மார்க்கட்டிங் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எம்.றிஸ்மிர், சொப்டா நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் நஸீர், சாய்ந்தமருது, மாளிகைக்காடு பாடசாலை அதிபர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ், திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர் உட்பட கல்விமான்கள், புத்திஜீவிகள், பாடசாலை நலன்விரும்பிகள், அதிபர் சங்கப் பிரதிநிதிகள், அல்-ஹிலால் வித்தியாலய பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பாடசாலை முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தவ்ரது ரமழான் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு





(எஸ். அஷ்ரப்கான்)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு, கல்முனை ஹூதா ஜும்ஆப் பள்ளிவாசல் தஃவா குழுவின் ஏற்பாட்டில், ஹுதா அழைப்பு வழிகாட்டல் பணியகம் நடத்திய தவ்ரது ரமழான் மாணவர்களுக்கான ரமழான் கால செயலமர்வின் பரிசளிப்பு நிகழ்வு கல்முனை ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி ஜே.எம்.ஷாபித் (ஸரயி, றியாதி) தலைமையில் பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் பங்குபற்றுதலுடன், இடம்பெற்ற இந்நிகழ்வில் உலமாக்களான மௌலவி ஸாமில் (ஹாமி), சாபித் (ஸரயி, றியாதி), அப்லல் (ஹாமி), அனஸ் (ஹாமி), ருஸ்லீ (ஹாமி) ஆகியோர் மாணவர்களுக்கு கற்பித்தமைக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து 10 நாட்களாக நடைபெற்ற இந்த இலவச செயலமர்வில் கலந்துகொண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்ட மூவருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், அனைத்து மாணவர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள், தஃவா குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எழுத்தாளர் மர்ஹூம் ஆசுகவி அன்புடீனின் நினைவுப் பேருரையும் இப்தார் நிகழ்வும்



(அட்டாளைச்சேனை மத்தி, திராய்க்கேணி செய்தியாளர்கள்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மர்ஹூம் கலாபூஷணம் ஆசுகவி அன்புடீனுக்கான நினைவுப் பேருரைகளும் இப்தார் நிகழ்வும் கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜஹ்பரின் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது.

இந் நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.ஹனிபா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஸாபிர், ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.மன்சூர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், ஓய்வு பெற்ற முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.வாஹிட், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.எஸ்.ஜுனைத்தீன் மற்றும் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், பேரவை அங்கத்தவர்கள், குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மர்ஹூம் ஆசுகவி அன்புடீன் பற்றிய நினைவுப் பேருரைகள் கலந்துகொண்ட அதிதிகளால் நிகழ்த்தப்பட்டதுடன், இவரின் பொன்விழா கண்ட "சிற்பம் செதுக்கிய சிற்பி" நூலின் பிரதியொன்று பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. நிகழ்வின் ஏற்புரையை அன்புடீன் சகோதரர் ஈழமதி ஜப்பார் வழங்கினார்.

# மருதமுனை ஊடகப் பேரவை தொடங்குகையும் இப்தாரும்

(மருதமுனை செய்தியாளர்)

மருதமுனை ஊடகப் பேரவை தொடங்குகையும், இப்தார் நிகழ்வும் நாளை வியாழக்கிழமை (20) மாலை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி பெண்கள் பிரிவில், மருதமுனை ஊடக பேரவையின் ஸ்தாபகர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மருதமுனை பிரதேச ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகப் பிரமுகர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ள இந்நிகழ்வில் மருதமுனை, பெரியநீலாவணை, அக்பர் கிராமம், பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு ஆகிய பிரதேசங்களில் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்கள் மருதமுனை ஊடகப் பேரவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மருதமுனை பிரதேசத்திற்கு நீண்டகாலத் தேவையாக இருந்துவரும் ஊடக அமைப்பின் தேவை உணரப்பட்டதன் காரணமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு பிரதேச அனைத்துப் பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவிப்பு





*(கிரான் செய்தியாளர்)*

மட்டக்களப்பு பிரதேச அனைத்துப் பகுதிகளுக்கும் இன்னும் சில வருடங்களுக்குள் போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிரான் புலிபாய்ந்தகல் கிராமிய பாலம் திறப்புவிழா மற்றும் புலிபாய்ந்தகல் வீதிக்கு கிறவல் இட்டு செப்பனிடுதல் போன்ற நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்றன. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இப்பாலம் உடைப்பு எடுத்து போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டதனால் விவசாயிகள், பால் பண்ணையாளர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் சிரமப்பட்டார்கள். அதேபோல் நாடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்த காலம், என்ன செய்வதென்று அறியாத சந்தர்ப்பத்தில் 23.26 மில்லியன் செலவில் பாலத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பொதுமக்கள் பாவனைக்காக இராஜாங்க அமைச்சரினால் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

அத்துடன், கிரான் பாலம் தொடக்கம் புலிபாய்ந்தகல் வரையான வீதிக்கும் கிறவல் போட்டு அதனை செப்பனிடும் பணியும் இதன்போது ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மேலும், இப்பாலத்தினை உறுதியாக அமைத்துக் கொடுப்பதில் பல காலம் முயற்சி எடுத்தும் முடியாமல் உள்ளதாகவும் தான் முதலமைச்சராக இருந்தபோது இப்பாதையானது கிரான் சந்தி தொடக்கம் கிரான் பாலம் மட்டும்தான் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இருந்தது என்றும் ஏனைய வீதிகளை வர்த்தமானி வெளியிடுவதற்கு பல ஆண்டுகள் சென்றதாகவும் அத்துடன், உலக வங்கி திட்டத்தில் முறுத்தானை வரைக்கும் அதேபோல் மியான்கல் வரைக்கும் வீதிகளை அபிவிருத்தி செய்வதாகவும் கச்சான் சீசன் முடிவதற்குள் மாவடியோடை பாலத்தினை கழற்றிகொண்டு மூக்குறையான் ஆற்றுக்கு பாலம் போட்டு அதனூடாக பஸ் சேவையை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மகாவலி என்று கூறுகின்றேன். அதை பற்றி சொன்னால் எமது மாவட்டத்தில் உள்ள முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகளுக்கே சரியான அறிவு இல்லை. பணத்தைக் கொண்டு வங்கியில் வைப்பிலிட்டு முடக்காமல் நாமும் 50,100 ஏக்கர் காணிகளை எடுத்து கச்சான், சோளம், அரிசி ஆலைகள், நெல் உலர்த்த தேவையான களங்களை அமைப்பதற்கும் வேறு ஏதும் தொழில் வாய்ப்பினை வழங்கக்கூடிய எவர் வந்தாலும் முடியுமான வரை காணிகளை வழங்குங்கள் என பிரதேச செயலாளரை பணித்தார்.

அத்துடன், முடியுமானோர் தங்கள் பதிவுகளை இப்பகுதிக்கு மாற்றுங்கள் என்றும் மகாவலி காணி பிரிப்பு வரும்போது நம்மவர் இல்லாவிட்டால் யாருக்கு காணி வழங்குவது? இப்பகுதியிலுள்ள மக்கள் தொகையைப் பாருங்கள். சில அரசியல்வாதிகளுடன் சேர்ந்து எல்லாவற்றையும் எதிர்ப்போம் என்று இருந்தால் எதுவும் செய்ய முடியாது. காணியற்றோருக்கு காணி வழங்கும் அதிகாரம் மகாவலிக்கு உள்ளது என்றும் நாங்கள் அரச பிரதிநிதி என்ற வகையில் அவர்களின் முடிவை இப்படி செய்யுங்கள் என்றும் கூற முடியும்.

மேய்ச்சல்தரை எனக் கூறுகின்றோம். மேய்ச்சல்தரைக்கு 37 ஆயிரம் ஏக்கர் காணிகளை வழங்க முடியும் என மகாவலி கூறுகின்றது. 05 இலட்சம் மாடுகள் வளர்க்க இந்த ஆயிரம் ஏக்கர் போதாது. நாம் இன்று எத்தனை ஆயிரம் மாடுகளை பதிவு செய்து வைத்துள்ளோம். ஒரு ஏக்கர் நிலத்தில் பத்து மாடுகள்தான் மேய முடியும் என ஆய்வுகள் கூறுகின்றன.

இது தொடர்பில் நீங்கள் மக்களை தெளிவுபடுத்த வேண்டும். மேலும் மாவட்டத்திற்கு தொழில்துறைகள் உருவாக்க வேண்டும். அதேவேளை, வர்த்தகத்தில் எமது இளைஞர்கள் ஈடுபடவும் வேண்டும். யுத்தத்தின் மூலம் ஒரு தலைமுறையினர் அழிந்துவிட்டனர். அதற்கு பின் வந்தோர் அரபு நாடுகளில் உள்ளனர். அந்நாடுகள் எல்லாம் அடுத்தகட்ட தலைமுறைக்கு ஏற்ப பொருளாதாரம் பற்றி சிந்திக்கின்றது. 2004ஆம் ஆண்டு இருந்ததுபோல் தொழில்துறைகள் இனி வரப்போவதில்லை.

உலக ரீதியில் பல போட்டிகள் வந்துள்ளன. 45வீத சனத்தொகை மக்களை கூட்டாகக்கொண்டு தனியான வங்கி கட்டமைப்பு நிதி மூலதனம் பற்றி சிந்திக்கின்ற காலம் உலகத்தில் நடந்துகொண்டிருக்கையில், எமது மாவட்டத்திலுள்ள இளைஞர்களின் தொழில்துறைகளுக்கு நாம் என்ன செய்யப்போகின்றோம் என வினவினார்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் சு.ராஜ்பாபு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர்களான பொ.பரதன், அ.லிங்கேஸ்வரன் மற்றும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அமைச்சரின் இணைப்புச் செயலாளர், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# உலருணவுப் பொருட்கள் வழங்கல்

*(பொத்துவில் செய்தியாளர்)*



செக்டோ – ஸ்ரீலங்கா நிறுவனம் ரமழான் மாதத்தினை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வருமானம் குறைந்த மற்றும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது. குறித்த வேலைத்திட்டத்திற்கமைய, மூன்றாம் கட்டமாக உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (18) செக்டோ நிறுவன காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது வருமானம் குறைந்த மற்றும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் என பலருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. செக்டோ – ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், ஜெஸ்கா அமைப்பின் திட்ட முகாமையாளர் அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம்.அர்ஷாத் (ஸஹ்வி) மற்றும் செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் ஆலோசகர் எஸ்.எல்.நிலாம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

இதன்போது அமைப்பின் உயர்பீட உறுப்பினர் ஏ.எல்.எம்.புஹாரி, கே.ஹஸ்புல்லா, மற்றும் பொருளாளர் ஏ.எல்.றிம்ஸான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் கடும் உஷ்ணம்

## வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவு வேண்டுகோள்

*(பாண்டிருப்பு செய்தியாளர்)*

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் உஷ்ணம் காரணமாக இங்குள்ள வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் அதிகளவிலான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள கல்முனை, நாவிதன்வெளி, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய இடங்களில் கடும் உஷ்ணத்தால் உண்டாகும் தோல் நோய், கண்நோய், தலையிடி, காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் இங்குள்ள வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவில் அதிகளவிலான மக்கள் சிகிச்சை பெற்றுச்செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்கள், நோயாளிகள் கடும் உஷ்ணம் நிலவும் இக்காலப்பகுதியில் தேவையற்ற வகையில் வெளியில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இப்தார் நிகழ்வுகள்

*(மாவடிப்பள்ளி செய்தியாளர்)*

கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வருடாந்த இப்தார் நிகழ்வு இன்று புதன்கிழமை (19) நடைபெறவுள்ளது.


ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் சமூகசேவையாளருமான எம்.எம்.ஜெஸ்மின் தலைமையில் கல்முனை அல்தாப் ஹோட்டலில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு, 26ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***

*(பொலிவேரியன் செய்தியாளர்)*

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரியபள்ளிவாசலின் மரைக்காயர் சபையினரால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இப்தார் நிகழ்வு இன்று புதன்கிழமை (19) மாலை 5 மணிமுதல் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரியபள்ளிவாசலின் மேல் மாடியில் இடம்பெறவுள்ளது.

## போடியார் புலம்பல்!



**ஜனாதிபதித் தேர்தல் வரப்போகுதாம் வார வருஷம் எண்டு கத அடிபடுது எலுவா.? ஆரு கேட்கிறாங்களோ தெரியா, நம்மட சிவாசிலிங்கம் கட்டாயம் கேட்டு தோப்பாரு! சத்தியமா அவருட தொழில் இதுதான்..**

**இந்த தடவ விளக்கு சின்னத்தில போட்டிபோட அவரு ரெடிபண்ணுவதாக கத அடிபடுது பாப்பம் எத்தனை வாக்கு எடுத்து மண் கவ்வுவார் எண்டத... கட்டாயம் நரி இவர இறக்காம உடாது இருந்து பாருங்கவன்!**

# புத்தாண்டில் பணியை ஆரம்பிக்கும்போது செலவுகளில் மாற்றத்தை வெளிப்படுத்துக!

## கிழக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

*(அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா செய்தியாளர்)*

புத்தாண்டில் பணியைத் தொடங்கும்போது, செலவுகளைக் குறைத்து, உறுதியான மாற்றத்தைக் காட்டுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் வலியுறுத்தினார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளைப் போக்க நேரடி பங்களிப்பை வழங்கும் நோக்கில் செலவுக் கட்டுப்பாடு குறித்து வலியுறுத்தியதுடன், அதற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதில் அனைவரும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் புத்தாண்டுப் பணிகள் செவ்வாய்க்கிழமை(18) காலை ஆளுநர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு வலியுறுத்தினார்.

மாகாணத்தில் பிரச்சினைகள் எழுந்தபோது நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவற்றை



எதிர்கொண்டோம். மாகாணம் என்ற ரீதியில் அந்தப் பிரச்சினைகளை சமாளித்தோம். நாட்டிலுள்ள ஏனைய மாகாணங்களை விட எமது மாகாணத்தின் அதிகாரிகள் எப்பொழுதும் சகல பொறுப்புகளையும் ஒன்றிணைந்து ஏற்றுக்கொண்டோம். இதனால் மாகாணம் அந்த வெற்றியைப் பெற்றது.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாகாணத்திற்கு வரும் வெளிநாட்டுத் தூதுவர்கள் கூட எமது மாகாணத்தின் வேலைத்திட்டத்தைப் பாராட்டுகின்றனர். அவர்கள் அந்த செய்தியை தங்கள் நாடுகளுக்கும் அனுப்புகிறார்கள் - என்றார்.

இதன்போது, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் சலுகா தினேந்திரா, ஊடக செயலாளர் ருசிர திலான் மதுசங்க, இணைப்பாளர்களான மகேஷ் சதுரங்க, சிந்தக விஜேவர்தன, மக்கள் தொடர்பு அதிகாரி பிரபாஷிகா விஜேசேகர, ஆளுநரின் உதவிச் செயலாளர் ஏ.ஜி.தேவேந்திரன், கணக்காளர் பி.கோணேஷ், நிர்வாக அலுவலர் கே.சுதாகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தலைமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை

*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் நிலையம், கலை, கலாசார பீடத்துடன் இணைந்து உள்வாரி பட்டதாரி மாணவர்களுக்கு தலைமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறையை திங்கட்கிழமை (17) கலை, கலாசார பீடத்தின் கலை அரங்கத்தில் நடத்தியது.

ஏ.றமீஸ் பிரதம அதிதியாக பங்கேற்றதுடன், கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தை வழங்கினார்.

சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.றியாட் ரூளி, மாணவர் நலன்புரி மையத்தின் பணிப்பாளர் எம்.றிஸ்வான் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,






இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்கள் நேரடியாகவும் இணையவழியூடாகவும் கலந்துகொண்டனர். சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் இணைந்து இந்நிகழ்வை முன்னெடுத்திருந்தனர்.

தலைமைத்துவம் பற்றிய இந்நிகழ்வின் வளவாளராக சவூதி அரேபியாவின் பெற்றோலியம் மற்றும் கனிமங்கள் தொடர்பான கிங் பஹத் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாதிக் எம்.செயிட் கலந்து சிறப்பித்ததுடன், ஆக்கபூர்வமான வகையில் மாணவர்களுடன் இடைவினையை ஏற்படுத்தியிருந்தார்.

மேலும், 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்த இந்நிகழ்வில் தலைமைத்துவம் தொடர்பான பிரயோக அறிவைப்பெறும் வகையில் வினா, விடைக்கான நேரம் ஒதுக்கப்பட்டதுடன் மாணவர்கள் அதிகளவான பயன்களைப் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கோட்டைமுனை விளையாட்டுக்கழக இணையத்தள அங்குரார்ப்பணம் மற்றும் இசைத்தட்டு வெளியீடு

*(புளியந்தீவு செய்தியாளர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக்கழகம் தனது 50 வருட வெள்ளிவிழாவை கொண்டாடவுள்ள தருணத்தில் அதனை முன்னிட்டு உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் இசைத்தட்டு வெளியிடப்பட்டதாக கழகத்தின் செயலாளர் வி.ஜெயதாசன் தெரிவித்தார்.






இது தொடர்பான ஊடக சந்திப்பு 'சண் சைன்' ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,


எமது கழகம் பல சவால்களைக்கண்டு அவைகளை தாண்டி தற்போது பொன்விழாவை காண இருக்கிறது. எமது பயணம் இலகுவான பயணமல்ல. இந்தப்பயணத்தில் இந்த வருடம் தேசிய கிரிக்கெட் குழுவுக்கு எமது கழகத்திலிருந்து வீரர்கள் தெரிவாக வேண்டும் என்பதே எமது இலக்காகும். அதற்காக வீரர்களை சிறப்பாக தயார்படுத்துவதற்காக சிறந்த கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அத்தோடு எமது 50 வருட பூர்த்தியை சிறப்பிக்கும் முகமாக மறைந்த வீரர்களான பீலிக்ஸ், பிரகாஸ் ஆகியோரின் ஞாபகார்த்தமாகவும் எமது கழகத்தைச் சேர்ந்த இரு கிரிக்கெட் அணிகள் கண்டி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களின் பிரபல்யமான விளையாட்டுக்கழக அணிகளுடன் சிநேகபூர்வமாக போட்டியிடும்.

மேலும், ஏப்ரல் 29ஆம் திகதி நடைபவனியுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகள் தொடர்ந்து டிசம்பர் முதலாம் வாரத்தில் அனைத்து நிகழ்வுகளும் நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது - என்றார்.

# உலக செய்திகள்

## குற்றச்சாட்டுகளுக்குப் பின் ட்ரம்பின் செல்வாக்கு அதிகரிப்பு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்ட பின்னர் அவரின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ள ட்ரம்ப், தேர்தல் பிரசார செலவுகளுக்காக கடந்த சில மாதங்களாக நிதி திரட்டி வருகிறார். 2023 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் ஒரு கோடியே 44 இலட்சம் டொலர் நன்கொடை மூலம் திரட்டியுள்ளார்.

நியூயோர்க் நீதிமன்றத்தில் கடந்த 4ஆம் திகதி ட்ரம்ப் மீது பொய்க் கணக்குகள் வழக்கில் கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு, அவருக்கு பிணை வழங்கப்பட்டது. ஆனால், இதைத் தொடர்ந்து ட்ரம்பின் செல்வாக்கு சரிவதற்குப் பதிலாக வெகுவாக அதிகரித்துள்ளமை அரசியல் பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மார்ச் 30இல் செய்தி வெளியான பின்னர், அடுத்த 24 மணிநேரத்தில் அவரின் தேர்தல் நிதிக்கு 40 இலட்சம் டொலர் நன்கொடை குவிந்தது. கடந்த மூன்று வாரத்தில் மட்டும் ஒன்றரை கோடி டொலர் நிதி குவிந்துள்ளது.

# அதிகாரத்துக்கான மோதலால் சூன்ய வலயமாகும் சூடான்

## அப்பாவி பொதுமக்கள் 200 பேர் பலி: 1,800 பேர் படுகாயம்; பீதியில் மக்கள்



- **வைத்தியசாலைகள் - பாடசாலைகள் மீதும் தாக்குதல் மருந்துகள் - மருத்துவ உபகரணங்களின்றி பரிதவிப்பு**
- **ஐ.நா. - ஆபிரிக்க கூட்டமைப்புகள் - உலக நாடுகள் கடும் கண்டனம்**

சூடானில் இராணுவத்துக்கும், துணை இராணுவத்துக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதலில் 200இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளதுடன், 1,800இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் பெரும்பாலானோரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இருதரப்பினரின் மோதலில் வைத்தியசாலைகள் சேதமடைந்து இருப்பதாலும், போதிய மருத்துவ உபகரணங்களோ, மருந்துகளோ இல்லாததாலும் சிகிச்சை பெற முடியாமல் நூற்றுக்கணக்கானோர் தவித்து வருகின்றனர்.

இந்த மோதல்களுக்கு அமெரிக்கா, சீனா, ரஷ்யா, எகிப்து, சவூதி அரேபியா மற்றும் ஐ.நா. அமைப்புகள், ஆபிரிக்க கூட்டமைப்பு ஆகியன கண்டனம் தெரிவித்துள்ளதுடன், இந்த மோதல் போக்கை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரும்படி வேண்டுகோளும் விடுத்துள்ளன.

இதேவேளை, சூடானில் அமைதியை நிலைநாட்ட அனைவரும் முன்வர வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளதுடன், மோதலில் ஈடுபட்டுள்ள இரு இராணுவப் பிரிவினரும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

**ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் மீது தாக்குதல்**

முன்னதாக நேற்றுமுன்தினம் கார்த்தும் நகரில் சூடானுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவரான அய்தான் ஓ ஹரா தாக்கப்பட்டார். வீட்டிலிருந்த அவரை ஆயுதமேந்திய நபர்கள் மிரட்டி கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். அவரிடமிருந்து பணத்தை பறித்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அதேபோல் அமெரிக்கத் தூதரக வாகனத்தின் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இதனை வெளியுறவு அமைச்சர் என்டனி ப்ளின்கன் உறுதி செய்துள்ளார். மேலும் இந்தச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்ததோடு மோதலில் ஈடுபட்டுள்ள சூடான் இராணுவத் தளபதியையும் அந்நாட்டு துணை இராணுவப் படைத் தளபதியையும் தொடர்புகொண்டு எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் ரெபிட் சப்போர்ட் போர்ஸ் (ஆர்எஸ்எவ்) (Rapid Support Forces (RSF) துணை இராணுவப் படைகளை இராணுவத்துடன் இணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இராணுவத் தளபதி அப்தல் பதா அல்-புர்கான் (Abdel Fattah al-Burhan) ஆர்எஸ்எவ் தீவிரவாத இராணுவம் என்று கருத்து கூறியதால், அவருக்கும் துணை இராணுவ கொமாண்டர் மொஹமட் ஹம்தான் தகாலோவுக்கும் (Mohamed Hamdan Dagalo) இடையே மோதல் ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, அந்நாட்டின் கார்டோம், (Khartoum) ஓம்டர்மன் பகுதிகளில் இராணுவம், துணை இராணுவப் படைகளுக்கிடையே இன்று 4ஆவது நாளாகவும் மோதல் நீடித்து இடம்பெற்று வருகிறது. ஆர்எஸ்எவ் துணை இராணுவத்தின் படைத்தளங்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே தலைநகர் கார்டோமிலுள்ள விமான நிலையம், ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றியுள்ளதாக ஆர்எஸ்எவ் அறிவித்தது. தற்போதைய சூழலில், சூடானில் இருக்கும் இந்தியர்களை எச்சரிக்கையுடன் இருக்கும்படியும், நிதானமாக செயற்படவும், வீட்டிற்குள் பாதுகாப்புடன் இருக்குமாறும், தேவையின்றி வெளியே வரவேண்டாம் என்றும் அங்குள்ள இந்தியத் தூதரகம் இந்தியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

**அதிகாரத்துக்கான மோதல்**

இந்நிலையில், சூடானின் அதிகாரத்தை யார் கைப்பற்றுவது என்றும் இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் உலக நாடுகள் வேண்டுகோள் விடுத்திருந்தாலும் கூட இந்த மோதல் இன்னும் அதிக நாட்களுக்கு நீடிக்கலாம் என்று கலவர ஆய்வு நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

சூடானில் முஸ்லிம்களே பிரதானமாக வாழ்கின்றனர். இது புனித நோன்பு காலம் என்பதால் முஸ்லிம்கள் நோன்பு மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில், இந்தக் கலவரத்தின் காரணமாக பண்டிகையும் பறிபோனது இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் சோகத்திலுள்ளனர். உயிர் பிழைத்திருப்போமா என்ற அச்சத்திலுள்ளனர்.

எனினும், சூடானில் இராணுவத்தினருக்கு இடையேயான மோதலில் 200இற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1,800இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

கடந்த சில நாட்களாக நீடித்துவரும் இந்த மோதலில் துணை இராணுவத் தளங்கள் மீது சூடான் இராணுவம் வான்வழித் தாக்குதல்களிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

சூடானின் பாடசாலைகள், வைத்தியசாலை உள்ளிட்டவற்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சர்வதேச சட்டங்களை மீறி இந்த வன்முறைத் தாக்குதல் தொடர்ந்து வருகிறது. போராளிகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் காயமடைந்துள்ளனர் என சூடானுக்கான ஐ.நா. தூதுவரொருவர் தெரிவித்துள்ளார்.

சூடானின் கிழக்கு பகுதிகள் மற்றும் செங்கடல் துறைமுகப் பகுதிகள் தனது கட்டுப்பாட்டுக்குள் உள்ளன என இராணுவப் படைகள் தெரிவிக்கின்றன. ஆனால், தெற்கே கோர்டோபான் நகரில் வலுவாக துணை இராணுவப் படை உள்ளது. இந்தப் பகுதியிலும், டார்பர் பகுதியிலும் மோதல் தொடர்ந்து நடந்து வருகிறது.

# இலங்கை அணிக்கு சாதனை டெஸ்ட் வெற்றி

## ரமேஷ் மெண்டிஸ் பந்துவீச்சில் சாதனை

சுற்றுலா அயர்லாந்து அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில், இன்னிங்ஸ் மற்றும் 280 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இலங்கை அணி, டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தங்களது மிகப்பெரிய டெஸ்ட் வெற்றியையும் பதிவு செய்தது.

அயர்லாந்து அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்து முதல் முறையாக இலங்கை அணியுடன் டெஸ்ட் தொடரில் ஆடுகிறது. அந்தவகையில் இரு போட்டிகள்கொண்ட தொடரின் முதல் போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, திமுத் கருணாரத்ன (179 ஓட்டங்கள்), குசல் மெண்டிஸ் (140 ஓட்டங்கள்), தினேஷ் சந்திமால் (102 ஓட்டங்கள்), சதீர சமரவிக்ரம (104 ஓட்டங்கள்) ஆகியோரின் 4 சதங்களின் உதவியுடன் 6 விக்கெட் இழப்புக்கு 591 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்தியது.


பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, 143 ஓட்டங்களுடன் முதல் இன்னிங்ஸை நிறைவுசெய்தது. பிரபாத் ஜயசூரிய 7 விக்கெட்டுகளை வீழ்த்தி டெஸ்ட் போட்டிகளில் தன்னுடைய சிறந்த பந்துவீச்சுப் பிரதியைப் பதிவு செய்தார். பின்னர் 448 ஓட்டங்கள் பின்தங்கியவாறு பலோவ் ஒன் முறையில் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த அயர்லாந்து அணி, நேற்று போட்டியின் மூன்றாம் நாளில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்கள் மாத்திரம் எடுத்து இன்னிங்ஸ் தோல்வியடைந்தது.



4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ரமேஷ் மெண்டிஸ் மொத்தமாக 50 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இலங்கை அணிக்காக குறைந்த டெஸ்ட் போட்டிகளில் (11) 50 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பந்துவீச்சாளராக சாதனை படைத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணிக்காக இப்போட்டியில் மொத்தமாக 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பிரபாத் ஜயசூரிய தெரிவாகினார்.

# சென்னையின் வெற்றிக்கு வழிவகுத்த பத்திரனவின் பந்துவீச்சு




நடப்பு ஐ.பி.எல். தொடரில் 24ஆவது லீக் போட்டியில் இறுதி நேரத்தில் இலங்கை வீரர் மதீஷ பத்திரனவின் சிறப்பான பந்துவீச்சு பிரதியுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 ஓட்டங்களினால் ஆர்.சி.பி. அணியை வீழ்த்தியது.

பெங்களூர் சின்னசுவாமி அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 226 ஓட்டங்களைக் குவித்தது.

227 என்ற மிகப் பெரிய இலக்கை எட்ட பதிலுக்கு ஆடிய பெங்களூர் அணிக்கு மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த டு ப்ளெசிஸ் மற்றும் கிளேன் மெக்ஸ்வெல் ஜோடி 61 பந்துகளில் 126 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று அணியை வெற்றியின் பக்கம் அழைத்துச் சென்றனர். எனினும், இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்பிற்கு 218 ஓட்டங்களைப் பெற்று வெறும் 8 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இறுதி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், அந்த ஓவரை வீசும் வாய்ப்பை அணித்தலைவர் டோனி மதீஷ பத்திரனவுக்கு வழங்கினார். டோனியின் நம்பிக்கைக்கு பலன் கொடுக்கும் வகையில் மதீஷ 10 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

# ரி10 போட்டித் தொடரை ஆரம்பிக்கும் சிம்பாப்வே

அணிக்கு 10 ஓவர்கள் கொண்ட ரி10 போட்டிகள் ஆரம்பிக்க சிம்பாப்வே கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக ரி20 போட்டிகள் மீதான ரசிகர்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது. இதற்கிடையே 10 ஓவர் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

இந்நிலையில், 10 ஓவர் போட்டிகளை சிம்பாப்வே கிரிக்கெட் சபை அறிமுகம் செய்யவுள்ளது. ஜிம் ஆஃப்ரோ ரி10 என்ற பெயரில் இந்த கிரிக்கெட் தொடர்




நடைபெறவுள்ளது. ஓகஸ்ட் மாதம் தொடங்கவுள்ள இந்தத் தொடரில் 6 அணிகள் பங்கேற்கவுள்ளன. போட்டித் தொடரில் இடம்பெறும் அணிகள், வீரர்கள் ஏலம் உள்ளிட்ட விபரங்களை விரைவில் வெளியிடப்படவுள்ளன. முன்னதாக ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கையில் 10 ஓவர் கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டது. இதனை ரி10 குளோபல் ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் நடத்தியது.

இதே நிறுவனம்தான் சிம்பாப்வேயில் 10 ஓவர் போட்டிகளை நடத்துவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த தலைமுறையினரின் திறமைக்கு ஏராளமான வாய்ப்புகளை அளிக்கும் வகையில் இந்த கிரிக்கெட் தொடர் நடைபெறும் என சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தலைவர் முகுலானி தெரிவித்தார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




**இன்றைய போட்டி**

போட்டி இல. - 26
லக்னோ எதிர் ராஜஸ்தான்
நேரம் - இரவு 7.30
இடம் - ஜெய்ப்பூர்

## 25ஆவது முறையாக 200ஐ கடந்த சி.எஸ்.கே.

பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணி 226 ஓட்டங்கள் குவித்தது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணி 200 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பது இது 25ஆவது நிகழ்வாகும். அதிக முறை 200க்கு மேல் எடுத்த அணி சென்னைதான்.

அந்தவகையில் 2ஆவது இடத்தில் பெங்களூர் அணியும் (24 முறை), 3ஆவது இடத்தில் பஞ்சாப் கிங்சும் (17 முறை) உள்ளன. இந்த ஆட்டத்தில் சென்னை தரப்பில் 17 சிக்ஸர், பெங்களூர் சார்பில் 16 சிக்ஸர் என்று மொத்தம் 33 சிக்ஸர் நொறுக்கப்பட்டன. இதன்மூலம் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஒரு ஆட்டத்தில் அடிக்கப்பட்ட முந்தைய அதிகபட்ச சிக்ஸர் எண்ணிக்கை சமன் செய்யப்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7